விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 09 வெள்ளிக்கிழமை (23.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 186

# புதிய கண்காணிப்பாளர்களை நியமிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதொன்று

## அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

**ஒரு மாத கால அவகாசத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளை நீக்கி அவர்களின் இடத்தில் புதியவர்களை நியமிப்பது நடைமுறையில் சாத்தியமானதாயிராது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.**

**நோர்வே ஆறு மாத கால அவகாசத்தை கேட்டிருந்த நிலையில் விடுதலைப்புலிகள் ஒரு மாதகால அவகாசத்தைக் கொடுக்க முன்வருவது கவலை அளிப்பதாகும் என அரச சமாதான செயலகம் நேற்று தெரிவித்துள்ளது.**


'விடுதலைப்புலிகள் கோருவது போன்று இந்தப்பணியை ஒரு மாத காலத்திற்குள் நிறைவேற்றுவது பெரிதும் நடைமுறைச் சாத்தியமில்லாத ஒன்று. நோர்வேயின் நியாயமான ஆலோசனையை விடுதலைப்புலிகள் கருத்தில் எடுப்பார்கள் என்று நம்புகின்றோம்' என சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உறுப்பினர்கள் கண்காணிப்புக் குழுவில் இருப்பதால் சமாதான செயற்பாடுகளுக்குக் குந்தகம் ஏற்படும் என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

டென்மார்க், பின்லாந்து, சுவிஸ்லாந்து நாடுகளின் கண்காணிப்பாளர்களை நீக்கினால் இப்போதுள்ள 57 உறுப்பினர்களில் 20 பேர்கள் மட்டுமே எஞ்சுவர்.

பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல (10 ஆம் பக்கம் பார்க்க)

## மங்கள-மன்மோகன் சந்தித்துப் பேச்சு




இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று மாலை சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து விளக்கியுள்ளார்.

இலண்டனிலிருந்து நாடு திரும்பும் வழியில் புதுடில்லியில் அவர் இச் சந்திப்பை மேற்கொண்டார். பேச்சுக்கள், புதிதாக தமிழ்நாட்டிற்கு வரும் அகதிகள் பற்றியும் தமிழக மீனவர்கள் இலங்கைப்படையினரால் துன்புறுத்தப்படுவது பற்றியும் பேசப்பட்டது.

இதேவேளை கடந்த ஆறு மாதங்களாக இலங்கையில் இடம் பெற்றுவரும் நூற்றுக் கணக்கான கொலைகள் ,விமானக்குண்டு வீச்சு தொடர்பில் இந்தியா கவலை கொண்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த சிப்பாய்கள் இருவர் நேற்று மரணம்

(துன்னாலை)

துன்னாலையில் நேற்று முன்தினம் மாலை தனியார் மினி பஸ்ஸில் பயணம் செய்த இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த கோப்ரல் ரஞ்சித் (வயது 32), சிப்பாய் முனசிங்க (வயது 23) ஆகிய இருவரும் மரணமடைந்துள்ளனர்.

இவர்களின் மரண விசாரணையை பருத்தித்துறை நீதிபதி அரியநாயகம் நேற்று பலாலிக்குச் சென்று மேற்கொண்டார்.

விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் சடலங்களை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதே வேளை இராணுவத்தினர் பயணம் செய்த தனியார் மினிபஸ் சாரதியையும் மினிபஸ் ஸையும் தடுத்து வைத்திருந்த இராணுவத்தினர் நேற்று பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த பூ.சசிகுமார் என்ற சாரதியின் வாக்கு மூலமும் பதிவு செய்யப்பட்டது. (ச-101)

## வடமராட்சி அல்வாய்வாசி நீர்கொழும்பில் சுட்டுக்கொலை

(துன்னாலை)

வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் நீர்கொழும்பில் வைத்து நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அல்வாயைச் சேர்ந்த சீவரத்தினம் சிவகுமார் (வயது 36) என்ற ஒரு பிள்ளையின் தந்தையாரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் 1982-ம் ஆண்டு முதல் நீர்கொழும்புப்பகுதியில் வர்த்தக நிறுவனம் ஒன்றை நடாத்தி வந்தவர் என்றும் வழமைபோல் வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு வீடு நோக்கி நடந்து செல்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ராகமவைத்தியசாலைக்குஎடுத்துச் செல்கையில் அவர் மரணமானார். (ச-101)

## தியாகி திலீபனின் நினைவுத்தூபி அடித்து நொருக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் நினைவுத் தூபி உடைக்கப்பட்டுள்ளது. அப் பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற இராணுவத்தினரே நல்லூர் ஆலயத்தின் பின் பகுதியில் அமைந்துள்ள லெப் . கேணல் திலீபனின் நினைவுத்தூபியை அடித்துச் சேதப்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நினைவுத் தூபியில் பொறிக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்தினையும் அபகரித்துச் சென்றுள்ளனர். அப் பகுதியில் இருந்த ஏனைய மாவீரர்களின் திருவுருவப்படங்களையும் மின் குமிழ்களையும் அடித்துச் சேதப்படுத்தி தமது காடைத்தனத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குள் அமைந்துள்ளபணியாளர் விடுதியும் தீயிட்டுக்கொளுத்தப்பட்டுள்ளது.

அந்த விடுதியில் இருந்த பொருட்களை சூறையாடியும் படங்களைத் தீயிட்டுக்கொளுத்தியும் விடுதியின் மேற்கூரைக்கு தீவைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மட்டக்களப்பில் மூவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவத்தினராலும் , இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராலும் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் நேற்று முன்தினம் சைக்கிளில் சென்ற ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஜெயந்திபுரம் பகுதியில் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றின் உரிமையாளரான றோய் வெல்ட் (வயது 39) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு வாழைச்சேனையில் துணை இராணுவக்குழுவினரால் கடத்திச் செல்லப்பட்ட சண்முகம் விஜயரட்ணம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை துணை இராணுவக் குழுவினரால் அவர் கடத்திச் செல்லப்பட்டார். வாழைச்சேனையில் உள்ள பாடசாலைக்கு அருகாமையிலிருந்து நேற்று முன்தினம் சண்முகம் விஜயரட்ணத்தின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் இராணுவத்தினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சந்திவெளிப் பகுதியில் உள்ள அரவை ஆலை ஒன்றுக்குள் நேற்று இரவு 11 மணியளவில் உள்நுழைந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

# பேசாலை தேவாலயம் மீதான தாக்குதல் மன்னார் ஆயர் வத்திக்கானுக்கு கடிதம்

மன்னார் பேசாலை தேவாலயம் மீதான கடற்படையின் அட்டூழியத் தாக்குதல் குறித்து வத்திக்கானுக்கு மன்னார் ஆயர் இராயப்பு யோசப் அடிகளார் கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கையின் மிகப் பெரிய தேவாலயங்களில் ஒன்றான மன்னார் விக்டோரி தேவாலயத்தில் கடற்படையினர் மேற்கெண்ட தாக்குதலில் அப்பாவி மக்கள் இரத்தம் சிந்தியுள்ளமையால் தேவாலயத்தின்புனிதம்பாதிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஆறு பொதுமக்களின் சடலங்களை எரியூட்டி விட்டு வந்திருக்கிறேன்.

உள்ளூர் மக்கள் கடற்படையினரால் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். பேசாலையில் உள்ள 7ஆயிரம்மக்கள்தங்களை இந்தியாவுக்கோ அல்லது விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கோ அனுமதிக்குமாறு கெஞ்சுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் இத்தேவாலயம் தாக்கப்பட்டதாக அரசாங்கம் பொய்யான தகவலைப் பரப்பி வருகிறது. பேசாலையில் உள்ள கடற்படையினரும், பொலிஸாருமே இத் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் படுகாயமடைந்தோரை காப்பாற்றவும் அவர்களை நோயாளர் காவு வண்டியில் கொண்டுசெல்லவும் என்னை இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை.

உள்ளூர்இராணுவத் தளபதியை அழைத்து பேசாலையில் உள்ள 7 ஆயிரம் மக்களை சந்திக்கச் செய்தோம். பேசாலையில் உள்ள கடற்படையினரது கொடுமைகள் குறித்து அந்த மக்கள் கதறியழுத நிலையில் தகவல்களைத் தெரிவித்தனர். தாம் விடுதலைப்புலிகளின் பகுதிக்கோ அல்லது தமிழ் நாட்டுக்கோ செல்வதைத் தடுக்கக் கூடாது என்றும், இல்லையெனில் கடற்படையினரால்நாங்கள் அனைவரும் ஒரு நாள் கொல்லப்பட்டு விடுவோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

புனித வழிபாட்டு இடமான தேவாலயம் கூட எங்களுக்குப் பாதுகாப்பில்லாமல் ஆகிவிட்டது. ஆகையால் அப்பாவி மக்களாகிய நாங்கள் எங்கே போவோம் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர். அப்பாவி மக்களுக்கு உள்ளூர் இராணுவத் தளபதி உத்தரவாதம் அளித்த போதும் இத்தகைய உத்தரவாதங்கள் தங்களுக்கு பலமுறை அளிக்கப்பட்டு விட்டதாகவும், இந்த வார்த்தைகள் எல்லாம் நீரின் மேல் எழுதியவை என்றும் மக்கள் குமுறினர்.

பேசாலை கடலில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான மோதலின்போது வங்காலை பாடில் மீனவர்கள் குடியிருப்புக்களையும் மீன்பிடி உபகரணங்களையும் கடற்படையினர் எரித்து சாம்பலாக்கினர். மேலும் காட்டாஸ்பத்திரி கடற்கரையில் மீன்பிடித்துவிட்டு வந்துகொண்டிருந்த ஆறு மீனவர்களை மண்டியிடச்செய்து அவர்களின் வாயில் துப்பாக்கியை நுழைத்துசுட்டுள்ளனர். அவர்களில் 4பேர் இறந்துள்ளனர். கைகளில் அடையாள அட்டைகளை பிடித்தபடியே அவர்கள் இறந்துள்ளனர். கடற்படையினரிடமிருந்து தப்பி ஓட முயன்ற இருவர் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

பேசாலை பகுதியில் கடற்படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பல வீடுகள் சேதமடைந்தன. விக்டோரி தேவாலயத்தின் சுவர்களிலும் அந்த சுவடுகள் உள்ளன. காற்சட்டை அணிந்து இரு உந்துருகளில் வந்த 4பேர் தேவாலயத்தின் மீது கைக்குண்டுகளை வீசினர். 6ஆயிரம்மக்கள் உள்ளே இருந்த நிலையில் துப்பாக்கிச் சூடுகளைநடத்தினர். இதில் பெரும் தொகையிலான பொதுமக்கள் படுகாயமடைந்தனர். தேவாலயத்தில் இருந்த புனித வளனார் விக்டோரி சிலையும் சேதமடைந்துவிட்டது. கடற்படையினரில் ஒருவர் ஜன்னலைத் திறந்து உள்ளே கைக் குண்டை வீசினார். இதில் பெருந் தொகையான மக்கள் காயமடைந் துள்ளனர் என்று அந்தக் கடிதத்தில் இராயப்பு யோசப்பு அடிகளார் தெரிவித்துள்ளார். (கு)


## சிறு விளம்பரம்
## ஆனந்தி திருமண சேவை

சிவந்த மேனியும் கவர்ச்சியுங் கொண்ட, 1969 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம் கிரக பாவ சங்கியை 29 1/2 செவ்வாய் தோஷ மற்ற உயரம்5'4'கொண்டபெண் மணிக்கு அரசு அல்லது தனியார் துறையில் பணிபுரியும் வரனை எதிர்பார்க்கின்றோம். சீதனம்பேசி தீர்மானிக்கப்படும் தகவல் கள் இரகசியம் பேணப்படும் வெளி யூர்களில் நிரந்தர குடியுருமை பெற்றவர்களும்தொடர்புகொள்ள வேண்டிய முகவரி ஆனந்தி திருமண சேவை V.A.சிவராசா சோதிடர் (வேலணை) 56 அம்மன் வீதி கந்தர்மடம்யாழ்ப்பணம். நேரடியாகவும் வந்து சந்திக்கலாம் மணப் பெண் இந்து வேளாளர் குடும்பம்.

(456)


## வருடாந்த மஹோற்சவம்

எழாலை புனகடி சொர்ணாம்பிகைஉடனுறைஅம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம்திகதி வெள்ளிக்கிழமை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி சனிக்கிழமை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் 03 ஆம்திகதி திங்கட்கிழமை 4.00மணிக்குதிருக் கல்யாணமும் 4 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் சாந்தியும் இடம்பெறவுள்ளன. (கு-9)

## இராசி பலன்

**23.06.2006**
**(ஆனி 9, வெள்ளிக்கிழமை)**
**திரயோதசி முன்னிரவு 11.14 மணிவரை**
**கார்த்திகை பிற்பகல் 4.07 மணிவரை**
**இராகுகாலம் 10.24-11.54மணிவரை**
**சுபநேரம் 5.54-7.24 மணிவரை**
**பிரதோச விரதம்**

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், தெய்வசிந்தை, விதண்டா வாதம், பணவிரயம். |
| இடபம் | சிந்தனை மிகுதி, திடீர் நன்மை, நல்ல முயற்சி, விருந்துபசாரம். |
| மிதுனம் | எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, அமைதிக்குறைவு, புத்திரரால் நன்மை. |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், காரிய நன்மை. |
| சிங்கம் | துரதேசச்செய்தி, எடுத்த காரியம்கைகூடும், போசனநன்மை, பெரியோர் உதவி. |
| கன்னி | புதிய திட்டமிடல், நிலைமாற்றம், எதிர் பாராத நன்மை, நல்ல மனைவாசம். |
| துலாம் | கௌரவக்குறைவு, காரியதடங்கல், கலகம், போசனசுகம். |
| விருச்சிகம் | தெய்வசிந்தை, காரிய அனுகூலம், செல்வாக்கு, திடீர் பயணம். |
| தனுசு | ஆரோக்கியம், முயற்சி பலிதம், செய் தொழில் விருத்தி, தெய்வசிந்தை. |
| மகரம் | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், பெரியோர் ஆதரவு, பணக்குறைவு. |
| கும்பம் | தாய்வழி உறவு, சுபசெலவு, எடுத்த காரியம் தாமதமாகும், புதிய விடயம். |
| மீனம் | சகோதரர் உதவி, பணவருவாய், தெய்வசிந்தை, காரிய நன்மை. |

- வளவன்

## பிரச்சினைகளைக் கேட்டறியும் கல்வியமைச்சரின் புதிய முறை

மாகாண கல்வி அதிகாரிகளை கொழும்பிற்கு அழைத்து பிரச்சினைகளை கேட்டறியும் முறையை இரத்துச் செய்ய கல்வியமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தீர்மானித்துள்ளார்.

இதற்கு பதிலாக தாமே நேரடியாகச் சென்று அதிகாரிகளின் பிரச்சினைகளை கேட்டறியவுள்ளதாகவும் இந்த நடவடிக்கை எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய அறிவுறுத்தல்களை கல்வியமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த உரிய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். (கு-9)

## விண்ணப்பம் கோரல்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியில் கீழ்காணும் பதவிகளுக்காக நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி 2006.06.30 ஆம் திகதியன்று 18வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். கல்வித் தகைமைகளாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதரப்)பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில மொழியில் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் ஆறுக்கு குறையாத பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கில மொழியில் அல்லது தமிழ் திறமை சித்தியுடன் எட்டுக்கு குறையாத பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ஹான்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி அறிவும் கனணி உபயோகம் தொடர்பான அறிவும்மேலதிகதகைமைகளாகும்.

ஹ ரன் சாட் அறிக்கையாளர் (தமிழ்) தமிழ் மொழியில் உயர் தேர்ச்சியும், பரந்த பொதறிவும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி அறிவும் கனணி உபயோகம் தொடர்பான அறிவும் மேலதிக தகைமைகளாக கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் 2006.06.30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே' என்னும் முகவரிக்கு கிடைக்கத் தக்கதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும் விண்ணப்பங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளஉறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். (கு-7)

## மக்களின் பிரச்சினைக்கு உடனுக்குடன் தீர்வு

கடந்த திங்கட்கிழமை யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது வருகை தந்திருந்த பெரும்பாலான மக்களின் பல்வேறு பிரச்சினைகளை ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தீர்த்து வைத்தார். இதன்போது உரிய அரச உயரதிகாரிகளும் அமைச்சரால் அழைக்கப்பட்டிருந்தனர்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்து கூட்டாகவும் தனியாகவும் வருகைதந்திருந்த மக்களின் காணி, வீட்டு வசதிகள், மலசல கூடம், குடிநீர், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் தொழில் முயற்சிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இச்சந்திப்பின் போது தீர்த்து வைக்கப்பட்டன.



இதன் போது தென்மராட்சி மறவன் புலோ மேற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான திருப்பணிச் சபையினர் அமைச்சர் முன் வைத்த கோரிக்கையின் பிரகாரம், மின்சார சபையின் பிரதி முகாமையாளருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் மேற்படி தேவஸ்தானம் அமைந்துள்ள பகுதிக்கு உடனடியாக மின்சார இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத் தார். மண்பிட்டி பகுதி மீனவ மக்களது தொழில் துறை சார்ந்த இடையூறுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் பாதுகாப்புத் தரப்பின் உயரதிகாரி ஒருவரை உடனடியாக யாழ். அலுவலகத்திற்கு வரவழைத்து அவருடன் கலந்துரையாடி மேற்கொண்டார்.

அண்மையில் இடம்பெயர்ந்து மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்ந்துள்ள அல்லைப்பிட்டி மக்களின் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவச சீருடைகள் மற்றும் கற்றல் சார்ந்த உபகரணங்களை விரைவில் வழங்குவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் தங்களது பல்வேறு பிரச்சினைகளை அமைச்சர் முன் வைத்து வருவதால் அவற்றில் பெரும்பாலான பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்துவைத்து வரும் அமைச்சர் விரைவில் யாழ். மாவட்ட அரச அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்த உள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (து)


## அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்

**3 ஆம் நாள் 23.06.2006**
**(ஐராவத கஜவாகனத் திருவிழா)**

## மயிலணியூர் மயில்வாகனா

*தேவாதி தேவர் சிறைமீட்ட செல்வா திருக்கை வேலா*
*சேவற் கொடியாய் செந்தூர் அகலாத தேவா*
*நாவார நாளும் நற்புகழ்பாடும் நாதருக்கு*
*நற்பதம் கா னிலமதிக்க நல்கு மருள் நாதா*
*தாவாரம் எங்குண்டாங் கெலாந் தரிப்பிடம் தேடி*
*அலைந்தோமிக அலுத்தோமினி யாற்றோமையா*
*மாலார வாரமாக மகிழவூர் கொண் டாடும்*
*மயிலணியூர் மயில்வாகனா மகாதேவர் மைந்தர்!*

*சிவ சண்முக வடிவேல்*

# கோல் அடித்ததால் அதிகரித்த வட்டி!

தென்கொரிய வீரர் கோல் போட்டு விட்டால் அங்குள்ள வங்கி வாடிக்கையாளர்களுக்கு இரட்டை சந்தோஷம். அதற்கு காரணம் வூரி வங்கி. தென்கொரிய வீரர் பார்க்சி ஜங் ஒரு கோல் அடித்தால் 0.2 சதவீதம் வட்டி அதிகமாகத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளது.

சமீபத்தில் நடந்த போட்டியில் ஜங்கோல் அடித்தார். ஆகவே போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வாடிக்கையாளர்களுக்கு ஏக குஷி.

என்றாலும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த வட்டி அதிகரிப்பை வழங்கினால் வங்கி தாங்குமா? இந்த வங்கி ஏற்கனவே வீரரின் பெயரிலேயே வழங்கிய 'ஐ லவ் பார்க் ஜி சங் ஐ' வைப்புத் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை.

இலங்கையில் உள்ள வங்கிகள் கிரிக்கெட் போட்டிகளின் போது இதுபோன்று திட்டத்தை அறிவித்தால் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக உள்ள கூட்டத்தை விட வங்கியில் கூடுபவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

## இரண்டாம் சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

குழு ஏ
ஜேர்மனி, ஈகுவடோர்
குழு பி
இங்கிலாந்து, சுவீடன்
குழு சி
ஆர்ஜென்டினா, நெதர்லாந்து
குழு டி
போர்த்துக்கல், மெக்சிக்கோ
குழு எப்
பிரேசில்
குழு எச்
ஸ்பெயின்

## வெளியேறிய அணிகள்

குழு ஏ
கோஸ்டாரிகா, போலந்து
குழு பி
பராகுவே, டிரினிடாட்
குழு சி
ஐவரிகோஸ்ட், செர்பியா
குழு டி
ஈரான், அங்கோலா
குழு ஜி
டோகா

*நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகள் வரை...

# வைரஸ் ஜாக்கிரதை

சர்வதேச அளவில் பெரிய நிகழ்ச்சிகள் நடக்கும்போது அதன் பெயரில் வைரஸ்களை பரப்புவதை ஒரு வாடிக்கையாகவே வைத்திருக்கிறார்கள். செப்டம்பர் 11 தாக்குதல் சம்பவத்தின் போதும் ஒலிம்பிக் போட்டிகளின் போதும் இதேபோன்று வைரஸ்கள் அனுப்பப்பட்டன. தற்போது நேக்டு வோர்ல்ட் கப் என்ற பெயரில் இ-மெயில்களுடன் வைரஸ்கள் அனுப்பப்படுகின்றன. இவற்றைத் திறந்து பார்க்கக்கூடாது.

உங்கள் கென்டக் லிஸ்டில் உள்ளவர்களின் பெயரிலேயே இ-மெயில்கள் வரும். ஆகவே ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உலக கோப்பை ஆர்வத்தை தவறாகப் பயன்படுத்தி அனுப்பப்படும் இந்த இ-மெயில்கள் சிஸ்ரம்-ஏ என்று அழைக்கப்படுகின்றன.

அவசரப்பட்டு இவ்வகை இ-மெயிலிடம் சிக்குவோர் தங்கள் கணனியில் உள்ள முக்கியமான பைல்களை இழப்பதோடு கணனியை செயல்பட வைக்கவும் மீண்டும் செலவழிக்க வேண்டியிருக்கும்!

# அதிக கோல் அடித்தவர்கள்

| வீரர் | அணி | கோல் |
|---|---|---|
| மிராஸ்லாவ் குளோஸ் | ஜேர்மனி | 4 |
| பெர்னாண்டோ டோரஸ் | ஸ்பெயின் | 3 |
| ஹெர்னன் கிரெஸ்போ | ஆர்ஜென்டினா | 2 |
| அகஸ்டின் டெல்கடோ | ஈகுவடோர் | 2 |
| டிம் காஹில் | அவுஸ்திரேலியா | 2 |
| கார்லோஸ்டெனோரிட் | ஈகுவடோர் | 2 |
| டேவிட் வில்லா | ஸ்பெயின் | 2 |
| டோட்ரிக்ஸ் | ஆர்ஜென்டினா | 2 |
| தோமஸ் ரோசிக்கி | செக்குடியரசு | 2 |
| பார்தோஸ் [illegible]ோசக்கி | போலந்து | 2 |
| ஓமர் பிர[illegible]வா | மெக்சிகோ | 2 |
| ஸ்டீவன் ஜெராட் | இங்கிலாந்து | 2 |
| பாலோ வான்சோப் | கோஸ்டாரிகா | 2 |

# ஓவன் கதை முடிவு

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் மைக்கேல் ஓவன் காயம் காரணமாக நாடு திரும்புகிறார்.

ஸ்வீடன் அணிக்கெதிரான லீக் ஆட்டத்தின் போது அவர் கணுக்காலில் காயமடைந்தார். ஸ்கான் சோதனைக்கு பிறகு ஓவன் விளையாட முடியாது என டாக்டர்கள் நேற்று முன் தினம் அறிவித்தனர்.

ஓவன் இல்லாதது இங்கிலாந்து அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# உரிமை கோரப்படாத பொருட்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் பறிமுதல்செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், கைமணிக்கூடுகள், மோட்டார்கள், தையல் இயந்திரங்கள் என்பன 24.06.2006ஆம் தினம் இந்நீதிமன்ற வளவில் வைத்துக் காலை 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமை கோருமிடத்து, விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் மன்றில் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களை பார்வையிடலாம் எனவும், விற்கப்பட்ட பொருட்களுக்குப் பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும் எனவும் எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்படவேண்டும் எனவும் யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் க.மீரா தெரிவித்துள்ளார். (து)

# மின்னிணைப்பு பயிற்சி

ஜீ.ரி.இஸட் நிறுவன அனுசரணையுடன் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றுவரும் மின்னிணைப்புப் பயிற்சியில் சுனாமி, போர் அனர்த்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களே பெருமளவில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்ற மேற்படி கல்லூரியின் பெற்றோர் தின விழாவில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் யுனிசெவ், சாந்திகம், ஜி.ரி.இஸட் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இப்பயிற்சிநெறி மூலம் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர்கள் பயிற்சி நெறியை பூரணமாக மேற்கொள்வதன் மூலம் தமக்கென ஒரு தொழிலைத் தேடிக்கொள்ள முடியும் எனவும் இது பயனுள்ள ஒரு பயிற்சிநெறி எனவும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார். (து-132, 133)

# சீமெந்தின் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் இராணுவத்தினால் தடை செய்யப்பட்டதனால் ஏற்பட்டுள்ள சீமெந்து, கம்பிகளின் விலைத் தளம்பல்கள் தொடர்பான யாழ்.வணிகர் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை வணிகர் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு கனரக வாகனங்கள் மூலம் ஏ 9 பாதை வழியாக சீமெந்தை எடுத்துவருவதற்கு ஆறு, ஏழு நாட்களாகின்றன என்றும், இதனால் அதன் விலையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வணிகர் சங்கத் தலைவர் கூறினார்.

இதற்கமைய பொஸோநா (பழைய கினோடி) சீமெந்தின் விலை 750 ரூபா எனவும் மிற்சுபி சீமெந்தின் விலை 800 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டது.

காலதாமதம் கனரக வாகனக் கட்டண உயர்வு காரணமாகவே சீமெந்தின் விலையை கூட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நிலைமை வழமைக்குத் திரும்பும் பட்சத்தில் விலை மாற்றம் பற்றி ஆலோசிக்கப்படலாமென்றும் தலைவர் மேலும் தெரிவித்தார். (து-133)

# கணனி நிலைய முகாமையாளர் மீது மோசடிக் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் உயர் பட்டப் படிப்புக்கான அனுமதியைப் பெற்றுத் தருவதாகக் கூறி மூன்று பேரிடம் 6 இலட்சம் ரூபா பெற்றுக் கொண்ட போதிலும் அந்த அனுமதியைப் பெற்றுக்கொடுக்காமல் ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 19ஆம் திகதி யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யூனிவெக் (கணனி மென்பொருள் பொறியியல் பூங்கா) முகாமையாளர் பாலசுப்பிரமணியம் சுரேஸ்குமார் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 2 இலட்சம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிபதி மேல் விசாரணையை 26 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் அவர் கையொப்பமிட வேண்டுமெனவும் நீதிபதி மேலும் உத்தரவிட்டுள்ளார். (து-133)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கம் அபிவிருத்திக்கான அரங்கு என்னும் தலைப்பில் ஏற்பாடு செய்துள்ள நான்காவது கருத்தரங்க அமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை செயல்திறன் அரங்க இயக்கத்தின் நிறைவேற்று இயக்குனர் தே.தேவானந்த், குழந்தை ம.சண்முகலிங்கம்த விழது ஆற்றல் மேம்பாட்டு மையத்தைச் சேர்ந்த ச.பாஸ்கரன், JSAC இன் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் ஆகியோர் வழங்கவுள்ளனர். (த-7)

## திறப்பு விழா

JBIC திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்தின் திறப்புவிழா நாளை சனிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார். (த-9)

# மன்னார் கடலில் மீன்பிடிக்கத் தடை

## 8000 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார் பேசாலைக் கடலில் அண்மையில் கடற்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் பின்னர் அப் பகுதி மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாம் என இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். இதன் காரணமாக அன்றாடம் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மீனவர்கள் பொருளாதார வசதியின்றி மிகுந்த சிரமத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கவனத்தில் கொண்ட பேசாலை, வங்காலை, தலை மன்னார், பள்ளி முனை, சாலுவாக்காடு, முருகன்கேணி ஆகிய பகுதிகளில் வாழும் மீனவர்கள் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். அதில் இப்பகுதிகளில் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்கின்றோம். அனைவரும் பேசாலைக் கடலிலே அன்றாட தங்கள் வாழ்வாதாரத்தினை நடாத்திக்கொண்டு வருகின்றோம்.

எனவே நாங்கள் சுதந்திரமாக தொழிலுக்கு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். எமது மீனவர்களுக்கு நிவாரணம் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். அல்லது எங்களை இந்தியாவுக்கு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என மூன்று கோரிக்கைகளை முன்வைத்து குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடம் கொடுத்துள்ளனர்.

இக்கோரிக்கைகளுக்கு மூன்று நாளுக்குள் அனுமதி வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## வருடாந்த மஹோற்சவம்

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 10ஆம் திகதி தீர்த்தோற்சவமும், மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (து)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் 'பெரியபுராணம்' என்னும் விடயம் பற்றி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (த-35)

## இன்று ஒரு தகவல்

# எப்போதும் பிஸி

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறார். அப்படியொன்றும் பெரிய நெருக்கடியான வேலை இல்லை. இருந்தாலும் எந்த நேரம் போய்ப் பார்த்தாலும் மிகவும் பிஸியாக இருப்பதாக காட்டிக்கொள்வார். அப்படி ஒரு சுபாவம் அவருக்கு.

"சார் உங்களைத் தான் பார்க்க வந்தேன்..." என்று சொன்னால் போதும் உடனே "கொஞ்சம் இருங்கள்" என்று கூறிவிட்டு மேசை மீது கிடக்கும் பைல்களை எல்லாம் எடுத்துப் பரபரவென்று திருப்புவார். அடுக்குவார். யாருக்காவது தொலைபேசி எடுப்பார். மறுபடியும் வைப்பார். எடுப்பார்... இப்படி ஏதாவது செய்து விட்டு..."ம்... இப்போது சொல்லுங்கள்... என்ன விஷயம்" என்பார்.

வெளியிலிருந்து யாராவது தொலைபேசி எடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் போனை எடுத்து உடனே கதைப்பதில்லை. கையில் எடுத்து சும்மா கொஞ்சநேரம் வைத்திருப்பது. அதன்பின் பேசுவது. அப்போதுதான் இவர் மிகவும் பிஸியாக இருக்கிறார் என்று போன் பண்ணுபவர்கள் நினைப்பார்களாம். இப்படிப்பட்டவர்களை நீங்களும் சில இடங்களில் பார்த்திருப்பீர்கள்.

பிஸியாக இருப்பதாக நடிப்பது இருக்கிறதே இந்தப் பழக்கம் இப்படியே நீடித்தால் பின்பு பெரிய மன நோயாளியாகக் கூட ஆகலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இவர்கள் நடிக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்பவர்கள் இவர்களைக் கேலியாக பார்ப்பார்கள். அப்படிப் பார்ப்பது கண்ணில் பட்டுவிட்டால் இன்னும் மனதுக்கு கவலையளிக்கும்.

பரபரப்பாக இருப்பதாக நடிக்கிறார்களே... இவர்களைப் பற்றி மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா? இவர்கள் பதவியில் தாம் விரும்பும் காரியங்களையும் அந்தஸ்தையும் பெறமுடியாத சூழ்நிலையில் தம்முடைய ஈகோவைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இப்படிச் செய்கிறார்களாம்.

மனிதனுடைய மனம் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஏதாவது சில காரணங்களைக் கற்பித்துக் கொண்டு சமாதானம் அடையுமாம். பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் ஆசிரியர்களைக் குறை கூறுவது இருக்கிறது பாருங்கள்... அது கூட இப்படித்தானாம். இதை மனதின் தற்காப்பு சாதனங்கள் என்று சொல்கின்றனர். பிஸியாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதும் அப்படிப்பட்ட ஒருவகை பரபரப்புத் தானாம்.

ஒருவருக்கு அவருடைய பதவியில் உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இப்படி பரபரப்பாக இருப்பதாக நடித்துக்கொண்டு அதை அடைந்ததாகத் திருப்திப்பட்டுக்கொள்வார். Alcoholic என்று சொல்வது போல இந்தக் குணத்தை Workaholic என்றும் சொல்லாம். இது போன்ற ஆசாமிகள் மன நல மருத்துவரிடம் போய் விடயத்தைக்கூறி ஆரம்பத்திலேயே குணப்படுத்திக் கொள்வது நல்லது.

இனிமேல் யாராவது உங்களிடம் நான் இருபத்தி நான்கு மணிநேரமும் பிஸி என்று சொன்னால் அல்லது எப்போதும் பிஸியாக இருப்பது போல் நடித்தார்களானால் அவர்களைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்.

சரி இந்த நிலைமையை தவிர்ப்பது எப்படி? ஒருவரை எந்த நாற்காலியில் (பதவியில்) கொண்டு போய் உட்கார வைத்தாலும்... அந்த நாற்காலிக்குப் பொருத்தமாகத் தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும். பதவிக்குரிய வேலை நன்கு பழக்கப்பட்டுப் போய்விட்டால் இந்த போலித்தனமான நடிப்புக்கு அவசியமில்லாமல் போய்விடும்.

ஒருநாள் காலை 10 மணி. எப்போதும் பிஸியாக இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஒருவர் அலுவலகத்தை விட்டு அவசரமாக வெளியே வந்தார். "என்ன சார் இது... எல்லோரும் அவசரமாக அலுவலகத்திற்கு வரும் நேரம் இது. நீங்கள் அவசரமாக வெளியே ஓடி வருகிறீர்களே?" என்றேன்.

"தினமும் கையோடு கொண்டுவரும் ஒரு முக்கியமான விடயத்தை இன்று வீட்டில் விட்டுவிட்டு வந்து விட்டேன். அதுதான் நான் அவசரமாகப் போகிறேன்"என்றார். அதற்கு "ஏன் இப்படி ஓடவேண்டும். பேசாமல் உங்கள் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு போக வேண்டியது தானே" என்றேன்."நான் வீட்டில் விட்டு விட்டு வந்ததே எனது ஸ்கூட்டர் தானே சார்... அதை எடுத்துக் கொண்டு வரத்தான் ஓடுகிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக ஓடி மறைந்தார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# 37 புதிய க.கா. குழு உறுப்பினரை தேடவேண்டிய நிலையில் நோர்வே

(கொழும்பு)

போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளை கண்காணிப்பாளர்களாக தாம் ஏற்கப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்ததாக நோர்வே தூதரகத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது விடயத்தில் அவர்கள் முன்னைய நிலைப்பாட்டையே கொண்டிருப்பதாக கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் முதற் செயலாளர் எரிக்யாவோ நுண்பேர்க் தெரிவித்திருக்கிறார்.

அவர் கிளிநொச்சியில் இருந்து திரும்பியபோது இது வருந்தவேண்டிய விடயமாய் இருக்கிறது. கண்காணிப்பாளர்கள் புதிதாக நியமிப்பதற்கு நாம் முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்டார். அவ்வாறாயின் நோர்வேக் கண்காணிப்பாளர்கள் 37 பேர் புதிதாக தேட வேண்டியிருக்கும்.

கண்காணிப்புக் குழுவில் உள்ள சுவீடன், பின்லாந்து, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களையே மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

முக்கியமாக வன்முறைகளும் தாக்குதல்களும் மோசமாகிவிட்ட இன்றைய சூழலில் பணியில் ஈடுபடுவதற்கு கண்காணிப்பாளர்கள் இல்லாத நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் கருணா ஆயுதக் குழுவினருடன் கொண்டிருக்கும் பகை காரணமாக மேலும் வன் முறைகள் வெடிக்கக்கூடிய சூழல் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். திருகோணமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையே சண்டை ஒன்று இடம்பெற்றதாகவும் இரு தரப்பும் துப்பாக்கி வேட்டுகளை பரிமாறிக்கொண்டனர் என்றும் இதில் எட்டுப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இதனை புலிகள் மறுத்துள்ளனர் .கருணா குழுவினரின் தாக்குதல்கள் பெரிய அச்சுறுத்தலாகும் என்றாலும் மக்களை பாதுகாப்பதற்காக எத்தகைய தாக்குதலுக்கும் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர். (து-6)

# போலி வாக்குகளை இரத்துச் செய்ய கோருகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலுள்ள போலியான வாக்குகளை இரத்துச் செய்ய வேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இந்த விடயம் குறித்து உரையாற்றுகையில், இதற்கான வேண்டுகோளை பிரதமரிடம் விடுத்துள்ளார். பாதுகாப்புப் படையினரின் ஆய்வுப்படி யாழ்ப்பாணத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 3 இலட்சமாகும். எனினும் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் 6 இலட்சத்து 44 ஆயிரத்து 270 பேர் வாக்காளர்களாக பதிவு பெற்றிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் பாதுகாப்புப் படையினரின் கணக்கெடுப்பின் படி ஒரு இலட்சத்து 58 ஆயிரம் வாக்குகளாகும். எனினும் கடந்த தேர்தலில் 2 இலட்சத்து 26ஆயிரத்து 604 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாக அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு உள்வாங்கப்படும் நிலையேற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.(த-9)

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாவிட்டால் அரசு பதவி விலகவேண்டும்- பந்துல குணவர்த்தன


(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாவிட்டால் அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டுமென ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட எம்.பி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளருக்கு ஏற்ற வகையில் அரசாங்கம் பொருளாதாரத்தை விளையாடக்கூடாது என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச நிர்வாகம் மண்சரிவில் சிக்கி தவிக்கின்றது. இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. இந் நிலையில் அரசாங்கம் பணத்தை அச்சடித்து டொலரின் பெறுமதியைக் கூட்டிக்கொண்டு வருகின்றது. அதன் நிமித்தம் இலங்கை ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது.



இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிக்கப்படுவதனால் இறக்குமதி செய்கின்ற ஒவ்வொரு பொருளுக்கும் மேலதிகமாக 10 ரூபாவை வழங்க வேண்டியுள்ளது. ஐ.தே. முன்னணி ஆட்சிக் காலத்தில் 93 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 104 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கூட்டமைப்பு அரசாங்கம் இன்றுவரை 220 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக பெற்றுக்கொண்டுள்ளது என்பதை நான் உறுதிப்படுத்துவேன் .ஏழை மக்களின் பணத்தில் அரசாங்கம் விளையாடுகின்றது என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன கருத்துக் கூறுகையில்,

வடகிழக்கு மக்கள் தங்களது தாய் நிலத்தை விட்டு விட்டு தென் இந்தியாவிற்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கின்றார்கள். இன்றுவரை 2853 பேர் இந்தியாவிற்கு அகதிகளாக சென்றுள்ளனர். இது ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

அதேபோல் வடகிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்கள் தங்களது சொந்த கிராமங்களை விட்டு விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றதா? மக்கள் கோருவதை அரசாங்கம் செய்கின்றதா? என்ற கேள்வி எழும்புகின்றது.

மன்னார் பேசாலை கடற்பரப்பில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து கருத்துக்கூற முடியாது. எனினும் அச்சத்தினால் இடம்பெயர்ந்து தேவாலயத்தில் தஞ்சமடைந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை கண்டிக்கத்தக்கது. படையினர் சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதைப் போல தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும். இதற்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்க வேண்டும் என்றார். (த)

# வருடாந்த கணக்கெடுப்பு

(கொழும்பு)

அரசதுறை நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பான வருடாந்த கணக்கெடுப்பை எதிர்வரும் யூலை மாதம் முத லாம் திகதி நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை பொது நிர்வாக அமைச்சு தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி. திசாநாயக்கா அறிவித்துள்ளார்.

அமைச்சுக்கள் , திணைக்களங்கள் , உள்ளூராட்சி சபைகள், கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் உள்ளிட்ட அரச துறையில் இக் கணக்கெடுப்பு ஏக காலத்தில் மேற்கொள்ளப்படும் . இது தொடர்பான படிவங்கள் மாகாண சபைகளுக் கும் அமைச்சுக்களுக்கும் அனுப்பிவைக் கப்பட்டுள்ளதா கவும் அவர் தெரிவித்தார்.

அரச துறைகளில் 8இலட்சத்துக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பல்வேறு தரங்களிலும் பதவிகளிலும் கடமையாற்றி வருவதாகவும் இவர்களுள் பெரும்பாலானோர் மாகாண அரச சேவையைச் சேர்ந்தவர்கள் எனவும் அமைச்சின் செயலாளர் டி .திஸா நாயக்கா மேலும் தெரிவித்தார். (த-7)

# கிராம அலுவலர்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 435 கிராம அலுவலர் பிரிவுகளில் 125 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கிராம அலுவலர்கள் இல்லை. இதனால் இந்தக் கிராம அலுவலர்கள் பிரிவு மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை உடனடியாக மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 125 கிராம அலுவலர்கள் பிரிவிலும் பதில் கடமையாற்றுவதற்கே அருகாமையிலுள்ள கிராம அலுவலர்கள் அரசாங்க அதிபரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய சூழ் நிலையில் பதில் கடமையாற்றுவது பெரும் சிரமம் என்பதில் கடமையாற்றும் கிராம அலுவ லர்கள் தெரிவிக்கி ன்றனர்.

எனவே, இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க அதிபரும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்ட மக்களும் பொது அமைப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-7)

# காங்கேசன்துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா உதவி

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறைமுகப் புனரமைப்புப் பணிகளுக்கு உதவிசெய்ய இந்தியா முன் வந்துள்ளது.

புனரமைப்புப் பணிகள் தொடர்பான நிதித் தேவைகள் குறித்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக துறைமுக விமானசேவைகள் அமைச்சின் மேலதிகசெயலாளர் றஞ்சித் சில்வாதெரிவித்துள்ளார்.

துறைமுகத்தின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ள சேதமடைந்த கப்பல்களை புனரமைக்கும் பணிகளுக்கும் நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

இந்தப் பணிகளில் அமைச்சின் ஊழியர்களைத் தவிர்ந்த வேறு நிறுவனங்களின் பணியாளர்களையும் சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக றஞ்சித் சில்வா குறிப்பிட்டுள்ளார். பாரிய கப்பல்கள் நங்கூரம் இட்டு நிற்கும் வகையில் துறைமுகத்தின் கடற்பகுதியை ஆழமாக் கும் நோக்கில் கடற்படுகை தொடர்பான ஆய்வுகைளை மேற்கொள்ளும் பணிகளையும் ஆரம்பித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

THE OFFICIAL SITE FOR THE 2006 FIFA WORLD CUP

# உலகக் கிண்ண உதை பந்தாட்டம் ஜேர்மனி 2006

## செர்பியாவுடனான போட்டியில் ஐவரிகோஸ்ட் அபார வெற்றி

செர்பியாவுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் ஐவரிகோஸ்ட் 3-2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் ஐவரிகோஸ்ட், செர்பியா அண்ட் மான்டினிக்ரோ அணிகள் மோதின. இரண்டு முதல் லீக் போட்டிகளில் இரு அணிகளும் தோல்வி அடைந்ததால் தொடரின் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்தன. முனீச்சில் நடந்த இப்போட்டி இரு அணிகளுக்கும் பயிற்சிப் போட்டியாக மட்டுமே அமைந்தது. ஆட்டம் ஆரம்பமாகி 10ஆவது நிமிடத்தில் செர்பியா தனது முதல் கோலை அடித்தது. டீஜன் ஸ்டான்கோவிக் கொடுத்த பாசை பெற்றுக் கொண்ட நிகோலோ சிஜிக் எளிதாக கோல் அடித்து அசத்தினார். அடுத்த 10 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்து ஐவரிகோஸ்டுக்கு அதிர்ச்சி அளித்தது செர்பியா. இம்முறை கோல் அடித்தவர் சசா



இலிக். பெட்ராக்கின் பிறி-கிக் வாய்ப்பை கோலாக மாற்றினார் இலிக். இதற்குப் பதிலடி கொடுக்க ஐவரிகோஸ்ட் சற்றுத் திணறியது.

ஆட்டத்தின் 35 நிமிடத்தில் அருணா டின்டேனின் அற்புத ஆட்டம் ஐவரிகோஸ்டுக்கு திருப்பம் அளித்தது. முதல் பாதியில் செர்பியா 2-1 என்ற முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் ஐவரிகோஸ்ட் வீரர்



அருணா டின்டேன் கலக்கினார். இவருடைய அற்புதமான ஆட்டத்தால் 67ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட், செர்பியாவை சமன் செய்தது. கோனர் வாய்ப்பில் அபுல் காதர் கெய்டா அடித்த உதையை தலையால் முட்டி கோல் அடித்தார் டின்டேன். ஐவரிகோஸ்டின் அபார ஆட்டம் தொடர்ந்தது.

86ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட் வீரர் பொனாவென்டர் கலோ மற்றொரு கோல் அடிக்க அரங்கமே அதிர்ந்தது. பதிலடி கொடுக்க நினைத்த செர்பியாவின் முயற்சி பலனளிக்கவில்லை.

இறுதியில் ஐவரிகோஸ்ட் 3-2 என்ற கோல் கணக்கில் மகத்தான வெற்றி பெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்றாலும் ஐவரிகோஸ்ட் 3 புள்ளிகள் மட்டுமே பெற்று தொடரை விட்டு வெளியேறியது.

**அமிர்தன்**

## நெதர்லாந்து - ஆர்ஜென்டினா ஆட்டம் சமநிலையில் முடிவு

நெதர்லாந்து, ஆர்ஜென்டினா அணிகள் மோதிய மூன்றாவது லீக் போட்டி சமநிலையில் முடிந்தது. பலம் வாய்ந்த நெதர்லாந்து அணியின் ஆக்ரோஷமான ஆட்டத்துக்கு முன் ஆர்ஜென்டினாவால் பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஆர்ஜென்டினா, நெதர்லாந்து அணிகள் மோதிய மூன்றாவது லீக் போட்டி நேற்று முன்தினம் பிராங்பர்டில் நடந்தது. முதல் இரண்டு லீக் போட்டிகளில் இரு அணிகளும் வெற்றி பெற்று தலா 6 புள்ளிகளுடன் களமிறங்கின. பலம் வாய்ந்த இரு அணிகள் மோதியதால் பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே போட்டி ஆரம்பமானது. ஆட்டத்தின் 4 ஆவது நிமிடத்தில் நெதர்லாந்துக்கும் 5 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவுக்கும் கோனர் வாய்ப்பு அமைந்தது. இரண்டு வாய்ப்புகளும் கோல் அடிக்காத நிலையில் வீணானது. ஆட்டத்தின் 27ஆவது



நிமிடத்தில் ஆர்ஜென்டினாவுக்கு பிறி-கிக் வாய்ப்பு கிடைத்தது. ரிக்யூல்மா அடித்த அந்த சொட் நெதர்லாந்து கோல் கீப்பர் வான்டர்சன் கையில் பட்டு வெளியேறியது. செர்பியாவுக்கு எதிரான இரண்டாவது லீக் போட்டியில் கோல் மழை (6கோல்கள்) பொழிந்த ஆர்ஜென்டினா அணிக்கு நெதர்லாந்து கடும் நெருக்கடி கொடுத்தது. இதன் காரணமாக இரு அணிகளும் முதல் பாதியில் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியின் முதல் நிமிடத்தில் நெதர்லாந்துக்கு பிறி-கிக் வாய்ப்பு கிடைத்தது. ராபின்வேன்பெர்சி கோல்லைனை நோக்கி அடித்தார். ஆனால் அது இலக்கை விட்டு வெளியே சென்றது. இதேபோல் 52



ஆவது நிமிடத்தில் தடைகளை மீறி ஆர்ஜென்டினா வீரர் ரிக்யூல்மா அடித்த உதையும் கோல் லைனுக்கு வெளியே சென்றது. ஆர்ஜென்டினா வீரர் கார்லஸ் டேவஸ் சிறப்பாக ஆடினார். ஆட்டத்தின் 72 ஆவது நிமிடத்தில் டேவஸ் அடித்த புயல் வேக உதை நெதர்லாந்து கோல்கீப்பரிடம் தஞ்சம் புகுந்தது. ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி ஆட்டத்தின் 69 ஆவது நிமிடத்தில் வெளியேற அவருக்கு பதில் மாற்று வீரராக கிரஸ் களமிறங்கினார்.

போட்டியின் கடைசி நிமிடம் வரை இரு அணிகளின் கோல் அடிக்கும் முயற்சி வீணானது. இறுதியில் 0-0 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலை ஆனது. நெதர்லாந்து தரப்பில் மூன்று வீரர்களும் ஆர்ஜென்டினாவில் இரண்டு வீரர்களும் மஞ்சள் அட்டை பெற்றனர். முதல் சுற்றின் முடிவில் குழு 'சி' பிரிவில் ஆர்ஜென்டினா நெதர்லாந்து அணிகள் தலா 7 புள்ளிகள் பெற்றுள்ளன. இதே பிரிவில் இடம்பெற்ற மற்ற இரண்டு அணிகளான ஐவரிகோஸ்ட் செர்பியா அணிகள் தொடரை விட்டு வெளியேறின.

## அங்கோலா - ஈரான் மோதல் சமநிலை இரு அணிகளும் 2ஆவது சுற்றிலிருந்து வெளியேற்றம்

அங்கோலா - ஈரான் அணிகள் மோதிய மூன்றாவது லீக் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் இரு அணிகளும் உலக கோப்பை தொடரில் இருந்து வெளியேறின. லீக் போட்டியில் குழு 'டி' பிரிவில் இடம்பெற்ற ஈரான், அங்கோலா ஒரு தோல்வி ஒரு சமநிலையையும் பதிவு செய்திருந்தன. எப்படியாவது வெற்றி பெற்று இரண்டாவது சுற்றில் நுழைய வேண்டும் என அங்கோலா போராடியது. அங்



கோலா வீரர் அக்வா சிறப்பாக செயல்பட்டார். ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் 75 அடி தூரத்திலிருந்து கோல் லைனை நோக்கி அக்வா அடித்த அழகான உதை கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய அக்வாவின் கோல் அடிக்கும் முயற்சி முதல் பாதியில் பலமுறை வீணானது. 27ஆவது நிமிடத்தில் ஈரானுக்கு கோனர் வாய்ப்பு கிடைத்தது.



முன்னணி வீரர் வாகித் ஹாஸ்மைன் தலையால் முட்டி கோல் அடிக்க முயன்றார். ஆனால் அதை கோல் கீப்பர் ரிகார்டோ தடுத்துவிட்டார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமல் ஏமாற்றம் அளித்தன.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் அங்கோலாவுக்கு கிடைத்தது முன்னிலை. 60 ஆவது நிமிடத்தில் அங்கோலாவின் ஜிகலங்கா அடித்த ரைட்ஸ்விங் உதை கம்பத்தில் பட்டு திரும்பியது. வந்த வேகத்தில் தலையால் முட்டி கோலாக மாற்றினார் அமடோ பிளாவியோ. இதற்குப் பதிலடி தரும் விதமாக ஈரான் வீரர் சோரப் பாக்டியாரிசடே 75 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

ஆட்டநேர இறுதிவரை இதே நிலை நீடிக்க 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையானது. இப்போட்டியில் அங்கோலா வெற்றி பெற்றிருந்தால் 4 புள்ளிகளுடன் இரண்டாவது சுற்றில் நுழைய வாய்ப்பு அமைந்திருக்கும். அங்கோலாவின் தோல்வி 'டி' பிரிவில் இடம்பெற்ற மற்றொரு அணியான மெக்சிகோவை இரண்டாவது சுற்றில் நுழைய வழிவகுத்துள்ளது.

## போர்த்துக்கலிடம் தோல்வியடைந்தும் இரண்டாவது சுற்றில் மெக்சிக்கோ

மெக்சிக்கோவுக்கு எதிரான மூன்றாவது லீக் போட்டியில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றி பெற்றது. போர்த்துக்கலின் மனிச், சப்ரோசா அசத்தலாக ஆடி கோல் அடித்தனர். இப்போட்டியில் தோல்வி அடைந்தாலும் குழு 'டி' பிரிவில் இரண்டாவது இடம்பெற்ற மெக்சிக்கோ உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றில் நுழைந்தது.

ஜெல்சன்கிர்சனில் நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது லீக் போட்டியில் குழு 'டி' பிரிவைசேர்ந்த போர்த்துக்கல், மெக்சிக்கோ அணிகள் மோதின. முன்னதாக நடந்த இரண்டு லீக் போட்டிகளிலும் போர்த்துக்கல்



வெற்றி பெற்றிருந்தது. மெக்சிக்கோ ஒரு வெற்றி ஒரு சமநிலையையும் பதிவு செய்திருந்தது. ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்திலேயே போர்த்துக்கல் வெற்றிக்கு அடிக்கல் நாட்டியது. போர்த்துக்கல் வீரர் மனிச் ஆட்டத்தின் முதல் கோலை அருமையாக அடித்தார். தடைகளை மீறி சிமோ கொடுத்த நேர்த்தியான உதை போர்த்துக்கலை முன்னிலை பெறச்செய்தது.

தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த போர்த்துக்கலுக்கு 22 ஆவது நிமிடத்தில் கோனர் வாய்ப்பு அமைந்தது. கோனர் கிக்கை தடுக்க முற்பட்ட மெக்சிக்கோ வீரர் மார்கசின் கையில் பந்துபட போர்த்துக்கலுக்கு அமைந்தது பெனால்டி வாய்ப்பு. பெனால்டி வாய்ப்பில் தடையின்றி கோல் அடித்தார் சிமோசப்ரோசா. இதற்கு மெக்



சிக்கோ 2 நிமிடங்களில் பதிலடி கொடுத்தது. ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோவின் பிராவவோ கோனர் கிக் அடிக்க, அதை தலையால் முட்டி கோலாக்கினார் ஜோஸ் போன்கசெகா. முதல் பாதியில் போர்த்துக்கல் 2-1என்ற முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் கோல் அடிக்க மெக்சிக்கோ கடுமையாகப் போராடியது. ஆட்டத்தின் 51 ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோவுக்கு பிறி-கிக் வாய்ப்பு அமைந்தது. பார்டோ அதை நழுவவிட்டார். ஆனால் அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் மெக்சிக்கோவுக்கு அதிர்ஷ்டம் அமைந்தது. பெனால்டி ஏரியாவுக்குள் போர்த்துக்கல் வீரர் மிகலின் கையில் பந்துபட மெக்சிக்கோவுக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. மெக்சிக்கோ வீரர் பிராவோ பெனால்டி கிக் அடித்தார். ஆனால் அது கோல் லைனுக்கு மேலே சென்றது. மற்றொரு முறை பிராவோ கோல் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட மெக்சிகோ ரசிகர்கள் வெறுப்படைந்தனர். ஆட்டத்தின் 70 ஆவது நிமிடத்தில் துடிப்புடன் ஆடி வந்த போர்த்துக்கலின் லூயிஸ் பிகோ வெளியேற அவருக்குப் பதில் மாற்று வீரராக போமார்ட் களமிறங்கினார். ஆட்ட நேர முடிவில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் மூலம் குழு 'டி' பிரிவில் 9 புள்ளிகளுடன் போர்த்துக்கல் முதல் இடத்தை பெற்றது. மெக்சிக்கோ 4 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பெற்றது. இவ்விரு அணிகளும் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது.

## இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| சவுதி அரேபியா - ஸ்பெயின் | கைசெல்சலுட்ரன் | 7.30 |
| உக்ரேன் - துனிசியா | பெர்லின் | 7.30 |
| டோகா - பிரான்ஸ் | கோலேஞ் | 12.30 (நள்ளிரவு) |
| சுவிட்சர்லாந்து - தென்கொரியா | ஹானோவர் | 12.30 (நள்ளிரவு) |

# சுவாமி விவேகானந்தர்

## ஆத்மாவின் அழைப்பு

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பத்தொன் பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த அந்தச் சீர்திருத்த வாதி, 'உலகத்தின் காரணமும், காப்புமான நித்திய வஸ்துவை, ஆராய



முடியாத ஆதிப்பொருளை, மாறுதலறியாத மூலப்பொருளை வழிபடுவோம், வணங்குவோம்' என்று முழங்கியவுடன் மேனாட்டுக் கல்வி பயின்ற பலர் பிரம்ம சமாஜத்தினராயினர். இந்துமதம், இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்துவம் முதலிய பல மத நூல்களைப் படித்திருந்த ராஜாராம் மோகன்ராய் எல்லாவற்றிலும் சிறிது சிறிதை இணைத்து, முக்கியமாகக் கிறிஸ்துவத்தையும் இந்து மதத்தையும் கலந்து பல கோட் பாடுகளை உருவாக்கினார்.

கல்வியும், செல்வாக்கும் மிக்க பலர் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்கள். கவீந்திரராகிய ரவீந்திர நாத தாகூரின் தந்தை தேவேந்திரநாத தாகூர் (1817-1905) ராம் மோகன்ராய்க்குப் பின் சமாஜத்தின் முக்கியஸ்தரானார். உபநிஷதங்களைப் பெரிதும் மதித்து வாழ்ந்த தேவேந்திர நாத தாகூர் 'மகரிஷி' என்றே போற்றப் பெற்றவர். பிரம்ம சமா ஜத்தின் பிரதான புருஷராகக் கருதப்பெற்ற கேசவ சந்திரசேனர் (1838-1884) கிறிஸ்துவக் கோட்பாடுகளில் மட்டுமன்றி கத்தோலிக்கரது போன்ற சடங்குகளிலும் தனி ஆர்வம் காட்டினார். கிறிஸ்துவச் சடங்குகளை சமாஜ அனுஷ்டானத்தில் புகுத்த விழைந்தார்.

சடங்குகள் எப்படியாயினும் பகுத்தறிவு மூலமே மத உணர்வைப் பூர்த்திசெய்ய முனைந்த ஒரு ஸ்தாபனம் பிரம்ம சமாஜம். எனவே படித்த இளைஞர்களை அது கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை.

நரேந்திரன் பிரம்ம சமாஜத்தில் தீவிரமாக ஈடுபட்டான். என்றாலும் நாள்பட நாள்பட பிரம்ம சமாஜம் அவனுக்குப்போதவில்லை. உலகுக்கு மூலகாரணமாகிய பரம்பொருள் உலக மக்களின் துயர் துடைப்பதற்காக உதவ வரும் என்ற நம்பிக்கை அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

சத்தியமாகிய கடவுளை நேருக்கு நேர் தரிசிக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்ட நரேந்திரன், சமாஜத்தினர் யாரேனும் அவ்வாறு கடவுளைக் கண்டதுண்டா என்றறியத் துடிப்பு கொண்டான். கடவுளைக் காண உதவாத மதம் தனக்குத் தேவையில்லை என்ற எண்ணத்துடன் மகரிஷி தேவேந்திரநாத தாகூரைத் காணப் புறப்பட்டான். முன்பே சில நண்பர்களுடன் தேவேந்திரநாதரை அவன் கண்டதுண்டு. அப்போது அவர் அவனை ஆழ்ந்து தியானிக்கும் படி நல்லுரை கூறியிருக்கிறார். அவர் அப்படித் தியானம் செய்து பரம்பொருளைக் கண்டிருப்பாரா? என்ற வினா எழுந்ததனால் தான் அவரை மீண்டும் நாடினான் நரேந்திர நாதன்.

கங்கைத் துறையிலே, ஒரு படகையே ஆசிரமமாக்கி அதில் வாழ்ந்து வந்தார் தேவேந்திர நாத தாகூர். அவரை ஒரே ஆவேசமயமாக அணுகினான் நரேன். 'இவர் கூறும் விடையில் தான் என்னுடைய மதமே இருக்கிறது' என்ற எண்ணம் அவன் உள்ளம் முழுவதையும் அழுத்த, அந்த அழுத்தத்தின் சுமையிலேயே புறப்பட்ட கேள்வி அவன் வாயில் அக்கினிக் கொழுந்தான உச்சாரணமாகப் புறப்பட்டது.

''மஹாசய! தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'' என்று படபடப்புடன் தேவேந்திரநாத தாகூரைக் கேட்ட நரேந்திரனின் நாவில் நின்ற நெருப்பு இப் போது அவன் கண்களில் ஜொலித்தது. அறி

## அத்தியாயம் - 10

வுக் கனலாக ஒளிர்ந்த அந்த அழகிய பெருங் கண்களையே நோக்கினார் தேவேந்திரர்: 'என் குழந்தாய்! எனக்கு ஒரு யோகியின் கண்கள் இருக்கின்றன' என்று மட்டும் கூறி மௌனமானார் நரேந்திரனுடைய நம்பிக்கை அடிமட்டமாகச் சரிந்தது. தேவேந் திரரிடம் அவனுடைய கேள்விக்கான விடை இல்லை.

வேறு பல மதத்தலைவர்களிடம் ஓடினான். ஒவ்வொருவரிடமும் அதே அதிசயமான மாபெரும் கேள்வியைக் கோட்டான் 'நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'

இல்லை, இல்லை இல்லவே இல்லை, யாரும் கடவுளைக் கண்டதாக அவனிடம் கூற முடியவில்லை.

சத்தியத்தில் அவனுக்கிருந்த நாட்டம் காரணமாக அவனே சத்தியமாகிவிட்டாற் போலப் பிரகாசிக்கும் போது அவனிடத்தில் யார் பொய் சொல்ல முடியும்? தாங்கள் மெய்ப்பொருளைத்தரிசித்ததில்லை என்று ஒவ்வொருவருமே ஒப்புக் கொண்டார்கள்.

'ஆகா அப்படியென்றால் கடவுளைக் காணவே முடியாதா? அதாவது எவ்வளவு பிராத்தனை செய்தாலும் தரிசனம் தராத ஒருவரா கடவுள்? அப்ப்டியும் கடவுள் என்பவர் இருக்க முடியுமா? கடவுள் இருக்கிறார் என்றால் அவர் கருணைமயமாகத்தான் இருக்க வேண்டும். நம்பும் அடியாருக்குத் தரிசனம் தரத்தான் வேண்டும். கடவுளை யாருமே காணவில்லை என்றால் யாருமே அவரை உள்ளன்புடன் நம்பவில்லை என்று பொருளா? அல்லது கடவுள் என்று ஒருவரே....

வெடிமருந்து ஏதோ உள்ளத்தில் வெடிப்பது போல இனம் தெரியாத ஐயங்கள் நரேந்திரனைத் தகர்த்தன. அந்த ஐயங்களைத் தீர்க்க கூடியவர் யார்?

திடீரென்று நரேந்திரனுக்கு நினைவுவந்தது. பேராசிரியர் ஹேஸ்டி பரவசத்தைப்பற்றி விளக்கும் போது குறிப்பிட்ட ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர், தன்கேள்விக்கு விடை கூறுவாரா?

ஹேஸ்டி கூறியது மட்டுமன்று; இராமச்சந்திர தத்தர் என்ற அவனது உறவினரும் பரமஹம்ச பரம புருஷரைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். கலியாணம் கார்த்திகை எல்லாம் வேண்டாம் என்று நரேந்திரன் மறுத்தபோது அவனிடம் இந்த உறவினர் 'நீ ஆன்மிக வாழ்க்கையை விரும்பினால் தட்சிணேசுரவரத்து ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசித்து வா' என்று கூறியிருக்கிறார்.

தட்சிணேசுவரம் செல்லாமலே அவரைத் தரிசித்தும் இருக்கிறான் நரேன் 1881ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுரேந்திர நாத் மித்ரா என்ற பக்தர் இல்லத்துக்குப் பரமஹம்சர் விஜயம் செய்தார். மித்ராவுக்கு நரேந்திரன் பழக்கமானவன். எனவே அன்று துதிப் பாடல்கள் பாடுவதற்காக நரேந்திரநாதனையும் தன் வீட்டுக்கு அழைத்திருந்தார் சுரேந்திர நாதர்.

நரேந்திரனும் அருமையாகப் பாடினான். பாட்டைக் கேட்டு மகிழ்ந்த பரமஹம்சர் அவனைப் பாராட்டினார். அவனைப் பற்றி அன்புடன் விசாரித்து விட்டு அவனைத் தட்சிணேசுவரம் வருமாறும் அழைத்தார். அந்த அழைப்பு இன்று நரேந்திரன் காதுகளில் மீண்டும் ஒலித்தது. வழிதெரியாது தவித்த நவீன பாரதத்துக்குப் புராதன பாரதத்தின் அழைப்புக் கேட்டு விட்டது. அறிவுக்கனலுக்கு அருட்புனலின் அழைப்புக் கேட்டுவிட்டது.

'கடவுளைக்கண்டதுண்டா? என்ற மகத்தான வினாவைச் சுமந்து கொண்டு நரேந்திர நாதன் தட்சிணேசுவரத்துக்குப் புறப்பட்டான்.

## கருணையின் சரிதம்

1936ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வங்காளத்தில், ஹுக்ளி மாவட்டத்திலுள்ள காமார்ப்புக்கு என்ற சின்னஞ் சிறிய கிராமத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரம் நிகழ்ந்தது. விவேகானந்தர் பிறந்த கல்கத்தா மாநகருக்கும் காமார்ப்புக்குர் கிராமத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் ஸ்ரீராம கிருஷ்ணர் அவதரித்த குடிக்கும் விவேகானந்தர் பிறந்த குடிக்கும் இடையே உண்டு. எளிமையும், ஏழ்மையும் நிறைந்த ஆசாரமான அந்தணக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

இவ்விரு மகான்களின் பிறப்பிலுமே ஒரு விசேஷம் இருக்கிறது. நகரப்புறத்து பகுத்தறிவு நாட்டத்துக்கு உறைவிடமாக விளங்கியவர் சுவாமிஜி. சிக்கலான சிந்தனைகளில் புகுந்து அவற்றை அலசி ஆராய்ந்து முடிவுகள் கண்டவர். கிராம மக்களின் உள்ளுணர்ச்சிக்கும், நம்பிக்கைக்கும் ஓர் உருமாகத் திகழ்ந்தவர் பரமஹம்சர். அது பகுத்தறிவுக்கு முரணான உள்ளுணர்ச்சி அன்று. பகுத்தறிவுக்கு விரோதமான நம்பிக்கை அன்று. ஆனால் பகுத்தறிவுக்கும் மேம்பட்ட உள்ளுணர்ச்சி,

**ஆன்மீகப் பாதை**
**ரா. கணபதி**

பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட நம்பிக்கை என்று அறியப் பெற்றதாலேயே நரேந்திர நாத தத்தர் விவேகானந்த ரானார். இது பிற்பாடு வரப்போகும் மகத் தான சக்தி வாய்ந்த ஒரு தெய்வீக வரலாறு.

காமார்ப்புக்குறைச் சேர்ந்த க்ஷுதிராமுக்கும், சந்திரமணிக்கும் வாய்ந்த சத்புத்திர பாக்கியம் தான் ஸ்ரீராமகிருஷ்ணர் அவர் நாராயணனின் அவதாரம்; கண்ணனின் வாக்குறுதிப்படி, தர்மம் தலை சாய்ந்தபோது அதனை உயிர்ப்பிக்கப் பிறந்தவர். என்றெல்லாம் பிற்காலத்தில் அவரது மகத்தான அனுபவங்களாலும் செயல்களாலும் போற்றப்பெற்றவர். இதனையே பல சூசகங்களால் அறிந்திருந்த க்ஷுதிராமும், சந்திரமணியும் அந்தக் குழந்தை கயாக்ஷேத்திர நாதனான நாராயணனின் அருட்பிரசாதம் எனக் கருதி அதற்கு கதாதரன் என்று பெயரிட்டனர்.

(தொடரும்)

# இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாக்க ஐக்கியதேசியக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வன்முறைகளால் இடம்பெயர்ந்துள்ள அகதிகள் அனைவரையும் பாதுகாக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கடந்த ஜனவரி முதல் 2500 அகதிகள் தென்னிந்தியாவுக்கு வடக்கு-கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். கர்ப்பிணி பெண்களும், குழந்தைகளும் மிகவும் அச்சத்துடன் தங்களது பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம் மற்றும் பொலனறாகலை ஆகிய இடங்களிலிருந்து சிங்களவர்களும் இடம்பெயர்ந்துள்ளனர். கெப்பிட்டிக் கொல் லாவ பகுதியில் அகதிகள் முகாமை நான் பார்வையிட்டேன் 1100 பேர் அகதிகளாக அங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அங்குள்ள அகதிகளில் சிலர் மீண்டும் தங்களது வீடுகளுக்குத் திரும்ப விரும்புகின்றனர். அதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

பேசாலை மற்றும் மன்னாரில் பொதுமக்கள்மீது நடத்தப்பட்டுள்ள அண்மைய தாக்குதல் மிகவும் கண்டனத்துக்குரியது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே போசாலையில் ஏற்பட்ட மோதல் குறித்து நாம் எதுவும் சொல்வதற்கில்லை. ஏனெனில் அரச படைகள் நாட்டைப் பாதுகாக்கின்ற உரிமை உள்ளவர்கள். இருந்தபோதும் அப்பாவி பொது மக்களை இலக்கு வைக்கக் கூடாது. இரு தரப்பும் அப்பாவி பொதுமக்களினது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக அரசாங்கம் தனது கடமையைச் செய்ய வேண்டும். ஏனெனில் இந்நாட்டினது அனைத்து மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. தென்னிலங்கையிலிருந்து மடு தேவாலயத்துக்கு வருகை தரும் சிங்களவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்றார். (த)

# மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சும் தேசிய அருங்கலைகள் பேரவையும் இணைந்து பாரம்பரிய மற்றும் உள்ளூர் கைத்தொழிலை கட்டியெழுப்பி அவற்றில் எதிர்கால சந்ததியை ஈடுபடுத்தும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டியொன்றினை நடாத்துவதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது.

போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. போட்டிகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை 011-2787954, 2785933 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (த-7)

# மனநோய்க்கான சிகிச்சை முறைகள் இலங்கையில் சிறந்ததாக உள்ளது

(கொழும்பு)

அடுத்து வரும் 15வருடங்களில் மன நோயானது உலகில் பாரிய பிரச்சினைக்குரியதாக அமையுமென சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். உலக சுகாதார புள்ளிவிபரங்களின்படி இந்த நோய்க்கான சிகிச்சைகள் இலங்கையில்சிறந்த முறையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒழுங்கான மருத்துவ சேவையில் முன்னேற்றத்தையடைய இலங்கை சுகாதார சேவை தவறியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்ட சுகாதார அமைச்சு உளநல மருத்துவக் கொள்கையொன்றை செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. (த-9)

# பாதுகாப்புத் தடைகளால் மீளமைப்புப் பணி பாதிப்பு

(மட்டக்களப்பு)

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தடைகளால் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகள் தடைப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் கே.மகேஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலைகளால் கிழக்குப் பிரதேசத்தில் மீளமைப்புப் பணிகளை இடைநிறுத்தி விட்டு ஒப்பந்தகாரர்கள் பலர் வெளியேறிவிட்டனர். உதவிவழங்குவோரும் வெளியேறிவிட்டனர்.


மேலும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விதிக்கப்பட்டுள்ள தடைகளால் கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சீமெந்து மற்றும் இரும்புக் கம்பிகளை விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் எடுத்துச்செல்ல முடியாத நிலை உள்ளது. பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி இப்பொருட்களை எடுத்துச்செல்ல இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு ஒப்பந்தக்காரர்கள் எடுத்துச் செல்லும் பொருட்கள் அனைத்தும் முழுமையாக சோதனையிடப்படுகின்றன. ஒப்பந்தகாரர்கள் வெளியேறிச் செல்வதற்கு இதுவும் ஒரு காரணம் என்றார். (த)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 05

முருக-தனுஷ்கோடி



*கல்யாண ஏற்பாடு*

கொஞ்ச நாள் கல்யாணப் பிரச்சினை அடியுடன் நிறுத்தப்பட்டது. ஆனால் நீடிக்கவில்லை. பெற்ற மனம் பித்து என்ற படி உறவினர் ஒருவர் மூலம் மகனைச் சமாதானப்படுத்தித் திருமணத்துக்கு சம்மதிக்க வைக்க அந்தத் தாயுள்ளம் முயற்சி செய் தது. கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி னால் இனி என்னை மறந்துவிட வேண்டியதுதான் என்று தனது முடிவான உறுதியான அசைக்க முடியாத அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அன்று முதல் கடைசிவரை திருமணம் என்ற பேச்சையே தலைவரிடம் சிவகாமி அம்மையார் எடுக்கவில்லை.

1922 ஆம் ஆண்டில் சாத்தூர்த் தாலுகாவின் காங்கிரஸ் மாநாடு ஈ.வெ.ரா பெரியார் தலை மையில் நடைபெற்றது. மாநாட்டு வரவேற்புக் கமிட்டிச் செயலாளராகக் காமராஜ் பணியாற்றினார். அப்போது தான் ஐந்து பேரில் ஒருவராக முதன்முதலாக மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத் தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களின் செல்வாக்கை உடைத்தெறிய வாரம் ஒரு கூட்டத்தை விருதுநகரில் தலைவர் நடத்தினார். ஜஸ்டிஸ் கட்சிக்கு வால்பிடித்த குட்டி முதலாளிகள் தலைவரை வெறுத்தனர். ஊரைக் குட்டிச் சுவராக்கப் புறப்பட்டிருக்கிறான் என்று அந்தத் தேசத் தொண்டனைப் பற்றி அவர்கள் கூறினார்கள்.

தங்கள் கடைகளில் சாதாரண நேரங்களில் காமராஜ் உட்காருவதைக்கூடச் சிநேகிதர்களிற் சில பேர் விரும்பவில்லை. தலைவரின் போக்கை ஏற்றுக்கொள்ளாத கனவான்கள் வியாபார விஷயத்தில் முட்டுக்கட்டை போட்டுவிடுவார்களோ என்று அந்தச் சிநேகிதர்கள் அஞ்சினார்கள்.

*நட்பை முறித்த நாட்டுப் பற்று*

முட்டுக்கட்டைகளும் சதிகளும் அவருக்கு மேலும் மேலும் உற்சாகத்தையும் தெம்பையுமே ஊட்டின. கல்லடி பல முறை அவர் பெற்றிருக்கிறார் . ஆனால் கலங்கிய நாள் கிடையாது. வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே அது அவருக்குத் தோன்றியது. எதிரிகளால் பல முறை அவர் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்.

நாட்டு விடுதலை காணப் புறப்பட்ட அந்த நல்லவனைக் கோடாரிக் காம்பேஎன்று கூட அவர் காது கேட்கக் கூறினார்கள் . வெள்ளையரை அண்டிப் பிழைத்த இந்த உள்ளூர் ,வெளியூர்ச் சீமான்கள் குறிப்பாகச் சில நாடார்கள் நாட்டு விடுதலைக்குப் பின் தலைவரை நாடி ஓடிவந்த சம்பவங்களும் சமயங்களும் நிறைய உண்டு. நாளுக்கு நாள் பிரச்சாரத்தின் வேகம் அதிகமாகியது. அவருடைய எதிரிகள் எதிர்பார்த்தபடி காமராஜ் குடை சாயவில்லை.

விருதுநகர் அருகேயுள்ள ஒரு கிராமத்துக்குத் தலைவர் பிரச்சாரத்திற்குச் சென்றிருந்தார். அப்போது எதிரிகளால் ஏவப்பட்ட அடியாட்கள் தலைவரைத் தாக்கி காயப்படுத்தினார்கள். அவரது உடையைக்கூடப் பிடுங்கிக் கொண்டனர். இப்படி வந்த எதிர்ப்புக்கள் எல்லாம் தலைவரை அரசியலில் இருந்து விரட்ட முற்பட்டன. ஆனால் இவரிடம் அவை தாம் தோல்வியடைந்தன.

பல வகையிலும் உதவியாக இருந்த நண்பன் ஒருவன் கள் குடிக்கிறான் என்ற விஷயம் தலைவருக்குத் தெரிந்தது. அவரைத் திருத்தப் பல வகையிலும் முயன்றார் . அது முடியாது என்று தெரிந்த போது உயிருக்குயிராகப் பழகிய அந்த நண்பனின் நட்பையே உதறித் தள்ளினார். நாட்டுப் பற்று நண்பனின் நட்பையும் ஒழித்துக்கட்டியது.

*பாட்டுப் பாடி வாள் எடுத்துப் புறப்பட்டார்*

தேசத்தில் காங்கிரஸ் மகாசபையில் சங்கநாதம் முழங்கிய போதெல்லாம் காமராஜைப் போர் முன்னணியில் கண்டோம்.

1923ஆம் ஆண்டில் தலைவர் காமராஜ் கள்ளுக்கடை மறியலை மதுரை நகரில் முன்னின்று நடத்தினார். மாடியில் இருந்த காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் போராட்டம் பற்றிப் பேசிவிட்டுக் கீழே இறங்கினார். போராட்ட நடவடிக்கைகளைக் கவனிக்கப் பக்கத்துத் தெருவுக்குச் சென்றார். அப்போது தலைவர் காமராஜ் இல்லாத நேரத்தில் பொலிஸ்காரர்கள் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்து அங்கிருந்த அனைவரையும் கைதுசெய்து அலுவலகத்தையும் பூட்டிவிட்டுப் போய் விட்டார்கள். கள்ளுக்கடை மறியலில் ஈடுபடவிருந்த பலர் சிறையில் இருக்க தான் மட்டும் வெளியில் இருப் பது பற்றிச் சொல்லிச் சொல்லி ஒவ்வொரு விநாடியும் அவர் வருந்தினார்.

அடுத்து நாகபுரியில் கொடிப் போராட்டம் நடந்தது. நாகபுரி நகரில் வெள்ளையர் குடியிருந்த ஒரு தெருவில் காங்கிரஸ்காரர்கள் கொடியைக் கொண்டு போகக்கூடாது என்று பொலிஸார் தடை விதித்தனர் . இதை எதிர்த்துத் தடையை உடைத்துக் காங்கிரஸ் தொண்டர்கள் ஊர்வலம் நடத்தினர் . த[illegible]யை மீறியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போராட்டத்திற்கு இந்தியா முழுவதிலும் இருந்து நாகபுரி நோக்கி காங்கிரஸ் கட்சியினர் படையெடுத்துப் போனார்கள் . தமிழ் நாட்டில் இருந்து தொண்டர் படையை அனுப்பும் பணியில் தலைவர் காமராஜ் ஈடுபட்டார் . தொண்டர்களை அனுப்பிய பின்பு தாமும் புறப்பட்டார் . காமராஜ் நாகபுரி போய்ச் சேருவதற்குள் ஓர் உடன்பாடு ஏற்பட்டுப்போராட்டம் நிறுத்தப்பட்டது.

இந்திய மக்கள் கைகளில் வாள் ஏந்திச் செல்ல அரசின் அனுமதியைப் பெறவேண்டும் என்று ஒரு சட்டம் நாட்டில் இருந்தது.6 அங்குல நீளத்துக்கு மேற்பட்ட கத்தி யாரிடமும் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. 6 அங்குல நீளத்துக்கு உட்பட்ட கத்தி மட்டுமே எடுத்துச் செல்ல அந்த சட்டம் அனுமதி வழங்கியது. அந்தச் சட்டத்தை மீறவேண்டும் என்று அவாரி என்பவர் வாள் போராட்டம் ஒன்று நடத்தினார் . அந்த இயக்கம் மதுரை வரைக்கும் பிரபலமாகியது.

மதுரையில் அந்தக் கிளர்ச்சியை நடத்துவதற்காக 5 வாள்களைத் தயார் செய்து அந்த இயக்கத்துக்குக் கொடுத்தார். காமராஜர் வாள் ஏந்தி ஊர்வலம் நடத்த மதுரையில் இருந்து சிலர் விருதுநகர் வந்தனர் . பொலிஸ் அடக்குமுறை எந்த நேரத்திலும் கட்டவிழ்த்து விடப்படும் நிலை அப்போது இருந்தது. விருதுநகர் வந்தவர்கள் ஊர்வலமாகப் புறப்படத் தயாரானபோது சிலர் வாள் ஏந்தி ஊர்வலமாகப் புறப்படத் தயங்கினர் . அவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட வாள்கள் காமராஜ் கையில் இருந்தன. ஊர்வலத்தில் கலந்துகொள்ளாமல் பின் தங்கியவர்களைப் பார்த்துத் தலைவர் ஏளனமாகச் சிரித்துக் கொண்டு பாட்டுப் பாடினார். தலைவர் பாடிய பாரதி பாட்டு விருதுநகர் வீதியை அதிர வைத்தது. நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி என்று தொடங்கி "வாய்ச் சொல்லில் வீ[illegible] கிளியே" என்று காமராஜ் உரக்கப் பாடினார். வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே என்ற கடைசி வரியை பாடியதும் காமராஜ் உயரே எழும்பி ஒரு குதிகுதித்தார். தலைவரின் இடையில் தொங்கிய அந்த வாள்கள் மராட்டிய வீரன் சிவாஜியின் வாளைப் போன்று இருக்கும். தலைவர் குதித்த குதியில் ணங் ணங் என்று வாள்கள் ஒலி கிளப்பின. சென்னையில் சட்ட மந்திரியாக அப்போது சர்.சி.பி. இராமசாமி ஐயர் இருந்தார். மலபார் தவிர ஏனைய இடங்களில் வாள் ஏந்திச் செல்லலாம் என்று இராமசாமி ஐயர் அறிவித்தார். தமிழ் நாட்டில் இப் போராட்டம் நடைபெற்று விடாதபடி இருக்கவே அவர் இதை அறிவித்தார். உட்னே நடைபெறுவதாக இருந்த போராட்டம் இதனால் நடைபெறவில்லை.

(தொடரும்)

# இந்தியா செல்ல தவம் கிடக்கும் அகதிகள்

(கொழும்பு)

இலங்கைப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையேயான் சண்டையிலிருந்து தப்புவதற்காக உடமைகளை விற்று குடும்பத்தினருடன் கடல் கடந்த வேளையில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு பின்னர் பாடசாலையொன்றில் விடப்பட்டிருப்பவர் மதுரைவீரன் காந்தராஜா. இப்பொழுது சூழல் மேலும் மோசமாகிவிட்ட நிலையில் தப்பிச் செல்வதற்கு வேறு ஏதேனும் மார்க்கம் தேடவேண்டிய நிலையில் இவர் இருக்கிறார்.

இராணுவத்திற்கும் புலிப்படையினருக்குமிடையே அகப்பட்டு நிற்கும் இவர் பாடசாலையின் வகுப்பறை ஒன்றில் தனது குடும்பத்தினருடன் சில பிளாஸ்ரிக் பைகளில் உடைகளையும் வைத்தபடி வேதனையுடன் இருக்கிறார்.இப்போதும் இந்தியாவுக்கு ஓடிவிடவேண்டும் என்பதே எனது விருப்பம் . வாழ்க்கையை முதலிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும் என்றாலும் என்ன செய்வது? என்று விரக்தி மேலிட இவர் கேட்கிறார்.

திடீரென வன்முறைகள் மோசமடையுமாயின் 1990களில் ஏற்பட்டது போன்ற பெருமளவு இடப்பெயர்வு ஏற்படலாம் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். மன்னார் பகுதியில் இராணுவத்தினர் பதுங்குகுழிகளை அமைக்கும் தீவிரத்தை பார்த்தால் 2002க்கு முந்திய போர் நிலை மீண்டும் ஏற்படலாம் என்று பலரும் தெரிவிக்கின்றனர்.

நான் ஐந்து தடவைகள் அகப்பட நேர்ந்தாலும் இந்தியாவுக்கு போயே தீர வேண்டும் என்று மே மாதத்தில் படகு கவிழ்ந்து இறந்துபோன தனது 14 வயது மகளின் படத்தை கையில் பிடித்தபடி வேதனைப்படுகிறார். 43 வயதான கோவிந்தன் ராம்குமார் இவர் 1990களில் இந்தியாவுக்கு அகதியாக சென்று பின்னர் சண்டை ஓய்வதைக் கண்டு திரும்பிவந்த ஒருவரா வார். இவரும் வேறுபலரும் தமது பிள்ளைகளுக்கு இந்தியாவில் பாட சாலை மற்றும் அடிப்படை வசதிகள் கிடைக்கும் என்று நம்பியபடியே இருகின்றனர்.(து-6)

# பனம் பொருள் உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சி

யாழ்.மாவட்டத்தில் பனம் கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபடுபவர்களின் தொகை கணிசமான அளவு குறைந்துள்ளதால் பனம் பொருள் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனால் பனை ஓலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கடகம், பெட்டிகள் ,நவீன கைப்பைகள், பாய்கள், பூக்கள் ,ஓலை விசிறிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்வதை குடிசைக் கைத்தொழிலாகச் செய்துவந்த பெண்களின் தொகையும் குறைந்து விட்டதனாலும் மூலப் பொருளாகிய பனை ஓலைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலும் இத் தொழிலில் போதிய கவர்ச்சிகரமான வருமானம் காணப்படாததாலும் இத் தொழிலில் ஈடுபடுவோர் ஆர்வம் காட்டாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் பனைத்தொழில் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பானது தற்போதைய நிலையில் பனைசார் தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்குவதில் சிரத்தைகொள்ளாமல் இருந்து வருவதால் பனைசார் பயிற்சிகளை முன்னெடுப்பதில் எத்தகைய அமைப்பும் முன்வராத நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் பனம் பொருட்கள் உற்பத்தி சார் பயிற்சிகளை நிறைவு செய்துள்ள நூற்றுக்கணக்கான இளம் பெண்கள் பல கிராமங்களில் இருக்கின்ற போதிலும் கூட அவர்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு கவர்ச்சிகரமான விலைகளைக் கொடுத்துக் கொள்வனவு செய்ய யாரும் முன்வருவதில்லை.

இதனால் பனம் பொருட்கள் உற்பத்திப் பயிற்சியில் ஈடுபடக்கூடிய இளம் பெண்கள் தாமாகவே இத்துறைக்கு வருகின்ற நிலையும் இப்போது காணப்படுவதில்லை. அத்துடன் குறித்து பயிற்சிக்கான மூலப் பொருட்களையும் ஊக்குவிப்புத்தொகையையும் பயிற்சியாளர்களுக்கு வழங்கி ஊக்கப்படுத்தக் கூடிய நிலவரம் மற்றும் வாய்ப்புக்கள் அருகிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இவற்றின் காரணமாக முன்னை காலங்களில் அபிவிருத்தியில் மேம்பட்ட நிலையில் இருந்த பனம் கைத்தொழில் துறை இன்று பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இதனால் இத் துறையில் மட்டும் வருமான ரீதியில் தங்கியிருந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் பெரும் அவலத் துக்கு உள்ளாகியுள்ளன எனத் தெரிய வருகின்றது. அதே சமயம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பனை, தென்னை வள உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில்உற்பத்திப்பணியில் ஈடுபடக்கூடிய தொழில் வல்லுநர்களின் தொகையும் பெரிய அளவில் குறைந்து வருவதாகவும் நிறுவன வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (த-16)

அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின்
வருடாந்த மஹோற்சவத்தை
முன்னிட்டு வலம்புரியில் இம்முறையும்
"நயினை நாகபூசணி அம்மன்
பாமாலை"
வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும்
உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்

## ஜோர்ஜ் புஷ் தெரிவிப்பு

(வியன்னா)

பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் போதும் மனித உரிமைகள் காக் கப்படும்



என்ற உறுதிமொழியை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் அளித்திருக் கிறார். ஐரோப்பிய யூனியன் நாடுகளும் அமெரிக்காவும் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு தொடர்பாக இந்த உறுதிமொழி தயாரிக் கப்பட்டிருக்கிறது.

குவாண்ட நாமோ சிறையில் ஈராக் போர்க் கைதிகளை அமெரிக்கா தலைமை யிலான பன்னாட்டுப் படை வீரர்கள் சித்திர வதை செய்ததைக் கண்டித்து உலகின் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புக் குரல் கள் எழுந்தன. ஐரோப்பிய நாடுகளும் இச் செயல்களைக் கண்டித்தன. இதை மனதில் வைத்தே அமெரிக்க அதிபர் இந்த உறுதிமொழியில் கையெழுத்திடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஷும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்க ளும் கையெழுத்திடுகிறார்கள். மனித உரி மைகள் சட்டம் அகதிகள் பாதுகாப்பு சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகி யவை மதித்து நடக்கப்படும் என்று கூட்ட றிக்கை தெரிவிக்கிறது.

2003ஆம் ஆண்டு ஈராக்கின் மீது அமெரிக்கா படையெடுத்ததை ஐரோப்பிய நாடுகள் பல ஆதரிக்கவில்லை. அப்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடு போர்க் கைதி களை நடத்தும் விதம் தொடர்பாக மேலும் அதிகரித்தது. இந் நிலையில் இக் கருத்து வேறுபாடுகளைக் குறைக்கும் வகையில் ஐரோப்பிய தலைவர்களுடன் புஷ் பேசவுள் ளார். குவாண்ட நாமோ குறித்து இரு தரப்பு கூட்டறிக்கையில் ஏதும் குறிப்பிடா விட்டா லும் சட்டம் எங்கு அமுலாவதில் லையோ அந்த மாதிரியான பகுதிகளுக்கு நம்முடைய நாடுகளில் இடமே இல்லை என்று ஜார்ஜ் புஷ்ஷிடம் ஆஸ்திரிய பிரதமர் உல்ஃப்காங் செஷல்கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (த)

WORLD NEWS
உலக தரிசனம்





மலேஷியாவில் இந்து கோயில்கள் இடிக்கப்படுவதை தடுக்க கோரி கோலாலம்பூரில் உள்ள மன்னர் அரண்மனை முன்பு இந்து பக்தர்கள் அமைதியாக போராட்டம் நடத்தினர்

# சதாமின் வக்கீல் சுட்டுக்கொலை

(பக்தாத்)

சதாம் உசேனுக்காக ஆஜராகிய வக் கீல் ஒருவர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர் பாக ஈராக் டிவி தெரிவித் துள்ளதாவது,



ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசேன் மற் றும் ஏழுபேர் மீது ஷியா முஸ்லிம் மக்களை படு கொலை செய்த வழக்கு விசாரணை நடந்து வரு கிறது. இந்த விசாரணை கடந்த ஆண்டு ஒக்டோ பரில் தொடங்கியது. அன்று முதல் சதாம் உசேனுக்கு ஆதரவாக ஆஜராகும் வக் கீல்களை கடத்தி சென்று கொலை செய்யும் சம்பவங்கள் நடந்து வருகின்றன. இதற்கு முன்பு இதுபோல் இரண்டு வக்கீல்கள் கொல்லப்பட்டுள்ள னர்.

சதாம் உசேனின் தலைமை வக்கீல் களில் காமீஸ் அல்-ஓபாய்டியும் ஒருவர் பக்தாத் நகரில் இவரை இரண்டு நாட்க ளுக்கு முன்பு தீவிரவாதிகள் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றுவிட்டனர். வக்கீல் படுகொலை செய்யப்பட்டதை ஈராக் பொலி ஸாரும் உறுதி செய்துள்ளனர்.

சதாம் உசேன் மீதான வழக்கு விசா ரணையில் இரண்டு நாட்களுக்கு முன்பு அவருக்கு மரண தண்டனை வழங்க வேண் டும் என தலைமை அரசு வக்கீல் தனது வாதத்தின் போது தெரிவித்து இருந் தமை குறிப்பிடத்தக்கது. (த)

# இந்தோனேசியாவில் நிலச்சரிவு 87 பேர் புதையுண்டு பலி!

இந்தோனேசியாவின் சுலவேசி மாகா ணத்தில் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள் ளத்திற்கு இதுவரை 87 பேர் பலியாகி உள் ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதி கரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவின் சுலவேசி மாகாணத்தின் பல்வேறு பகுதி களிலும் கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச் சரிவினால், ஏராளமானவர்கள் மண்ணில் புதையுண்டு இறந்த னர். பாதை சரியில்லாததால் இரா ணுவம் பொலிஸ் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு நடந்தே வந்து சேர்ந்தனர்.

இதையடுத்து புதையுண்டவர்களை தேடி மண்ணை அப்புறப்படுத்தும் பணி தொடர்ந்து துரிதகதியில் நடந்து வருகிறது. இதுவரை 87 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் 12பேரை காணவில்லை. இதில் சின்ஜாய் ரீஜென்சி தான் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதி இங்கு தான். அதிகபட்ச மாக 77 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பிஸ்கெட்டு கள், கம்பளிகள், மருந்துகள் மற்றும் துணி



மணிகள் போன்றவை அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாக சமூக நலத்துறை அமைச் சர் பிச்சடியர் செம்சா தெரிவித் தார். சம்பவ இடத்திலிருந்து மக்களை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தும்படி, அதிகாரி களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப் பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)



சீனாவில் சிசுவான் பகுதியில் உள்ள ஒரு நீர்த்தேக்கம் அருகே காயமடைந்து காணப்பட்ட ப ண்டா கரடியை வன விலங்கு அலுவலர் சோதிக்கிறார்

# கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரித்துள்ளது

(வாஷிங்டன்)

கடந்த 2005ஆம் ஆண்டில், இந்தி யாவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 19.3 சதவீதம் அதிகரித்துள்ளது. மெர்ரில் லிஞ்ச் முதலீட்டு குரூப்பும், கேப்ஜெமினி என்ற ஆலோசனை நிறுவனமும் உலக சொத்து விவரம் பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளன. அதில் கடந்த 2005ஆண் டில் உலகம் முழுவதும் உள்ள கோடீஸ் வரர்களின் எண்ணிக்கை குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

தங்களுக்குச் சொந்தமான வீடுகளின் சொத்து மதிப்பை தவிர ரூ.4.5கோடி மதிப் புள்ள சொத்து வைத்திருப்பவர்கள் மட் டுமே இந்த பட்டியலில் இடம்பெற்றுள் ளனர். இதன்படி தென்கொரியாவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 21.3 சதவீதமாக அதிகாரித்துள்ளது. இதற்கு அடுத்த இடத்தை இந்தியா பிடித்துள்ளது. இந்தியாவில் கோடீஸ்வரர்களின் எண் ணிக்கை 19.3 சதவீதம் வளர்ச்சி அடைந் துள்ளது. ரஷ்யாவில் 17.4 சதவீதமும் தென் ஆபிரிக்காவில் 15.93 சதவீதமு மாக கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகாரித்துள்ளது.

கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை வேக மாக அதிகரித்து வரும் நாடுகளின் பட்டி யலில், முதல் பத்து இடங்களை இந்நாடு கள் பிடித்துள்ளன. கடந்த பத்தாண்டு களில் உலகம் முழுவதும் உள்ள கோடீஸ் வரர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. பிரேசில், ரஷ்யா, இந் தியா, சீனா ஆகிய நாடுகளின் பொருளா தார வளர்ச்சி தொடர்ந்து வலுவான நிலை யில் உள்ளது.

கோடீஸ்வரர்களின் பட்டியலில் இந்தி யர்களின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த பொருளாதார நாடுகளின் பட்டி யலில், இந்தியா நான்காவது இடத்தைப் பிடிக்கும். 2050ஆம் ஆண்டில் அமெ ரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்து, வளர்ச்சி அடைந்த மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உருவெடுக்கும் ஆசிய-பசிபிக் பகுதிகளில் அமைதியின்மை நில வும் சூழ் நிலையிலும் அவற்றின் பொருளா தார வளர்ச்சி வலுவாக உள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் முதல் முறையாக அமெரிக்காவில் கோடீஸ்வரர் களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த 2004ஆம் ஆண்டில் அமெரிக்க கோடீஸ்வரர்களின் வளர்ச்சி 9.9 சதவீத மாக இருந்தது. தற்போது இது 6.8 சத வீதமாக குறைந்துள்ளது. உலகின் மொத்த முதலீட்டில் ஆசிய பசிபிக் நாடுகளின் பங்கு, கடந்த ஆண்டில் 23சதவீதமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளின் முதலீட் டின்பங்கு 22சதவீதம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (த)

> சோம்பல் இளைப்பாறுதலன்று. அது வேலையை விட அதிக களைப்பை அளிப்பதாகும். ஒன்றும் செய்யாதிருந்தால் இளைப்பாறக் கஷ்டமாகும்.
> -ஆவ்பர

வலம்புரி

## அரச திணைக்களப் பணிகள் துரிதப்படுத்த வேண்டும்

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மக்களுக்குப் பணியாற்றும் பொருட்டு அமைக்கப்பட்டவையாகும்.

அவற்றின் முழுமையான நோக்கு மக்கள் சேவை என்பதைத் தவிர வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனினும் அரச அமைப்புக்கள் தமது பணிகளை உணர்ந்து செயற்படுகின்றனவா என்பது கேள்விக்குரியது.

எனினும் இது அரச திணைக்களங்கள் அனைத்திற்கும் பொருத்தமுடையதல்ல என்பதை குறிப்பிட்டாகவேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை மோட்டார் போக்குவரத்து தலைமைத் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத்திணைக்களம், கடவுச்சீட்டுத்திணைக்களம்,இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் என்பற்றின் செயற்பாடுகள் மந்தமாகவே இருக்கின்றன.

யாழ்ப்பாண செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்படுகின்றவர்களது நிரந்தர வாகன சாரதி அனுமதிப்பத்திரம் கொழும்பில் உள்ள தலைமையகத்தில் இருந்து கிடைப்பதற்கு வருடக்கணக்காகின்றது.

சில வேளைகளில் அந்த அனுமதிப்பத்திரங்கள் உரியவர்களுக்கு கிடைக்காமலே போகின்றன. இதனால் சாதாரண பொதுமக்கள் படும் இன்னல்கள் சொல்லுந்தரமன்று.

நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் தயார் செய்யப்பட்ட போதிலும் அதனை அனுப்பிவைப்பதில் இழுத்தடிப்பு இடம் பெறுவது ஏன் என்பது தெரியாதுள்ளது.

இந் நிலைமை வடக்கு கிழக்கு என்ற பேதமை அரச திணைக்களப்பணிகளிலும் புரையோடியுள்ளனவா என்ற நினைப்பை ஏற்படுத்துகின்றது. இது ஒரு வகை.

அரச உத்தியோகஸ்தர்கள் பலர் 'அக்ரஹாரா' காப்புறுதி பெறுவதற்கு விண்ணப்பித்து விட்டு கொடுப்பனவைப் பெறுவதற்காக காத்திருக்கும் காலம் மிகவும் அதிகமானது.

அரச பணியாளர்களின் சம்பளத்திலிருந்து அக்ரஹாராவிற்கான கட்டணத்தை ஒழுங்காக வசூலித்துக் கொள்ளும் இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் கொடுப்பனவை வழங்குவதில் மட்டும் அசமந்தப்போக்கை கடைப்பிடிக்கிறது.

இத்தகைய நிகழ்ச்சிகளால் அரச பணியாளர்கள் தமது பணிநிலையிலும் அரச செயற்பாடுகளிலும் ஆர்வமற்றவர்களாகின்றனர்.

இதன் முடிபு அவர்களின் வெளிப்பாட்டுத்திறனை வீழ்ச்சிப்படுத்துவதாகவே அமையும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் மந்தகதியிலான செயற்பாடுகளால் தனி மனித பாதுகாப்பிற்கான உத்தரவாதம் இல்லாமல் போகின்றது.

தேசிய அடையாள அட்டைகளை பெறுவதற்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்கள் ஊடாக ஆட்பதிவுத்திணைக்களத்திற்கு அனுப்பிவிட்டு அடையாள அட்டைக்காக வருடக்கணக்கில் காத்திருப்பவர்களின் நிலைமை பரிதாபத்திற்குரியது.

இவை கொழும்பில் இயங்கக்கூடிய தலைமை அலுவலகங்களின் மந்த செயற்பாடுபற்றியதாக இருக்க, மறுபுறத்தில் திருகோணமலையில் உள்ள வடக்கு கிழக்கு மாகாண சபையின் பணிவேகத்தை நினைத்தால் வேதனையே மிஞ்சும்.

அதிகாரிகள் மேற்பார்வை செய்வதில்லையா? அல்லது அவர்களின் வயோதிபம் கடமைச்சோம்பலை ஏற்படுத்தி விட்டதா?

கோணேச்சரத்தானே நீதான் அங்கிருந்து பதில் தரவேண்டும்.

# அரச சார்பற்ற நிறுவனங்களால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களின் இறக்குமதி நடவடிக்கைகளால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் பியசிறி விஜயநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஜகத் புஸ்பகுமார இதைத் தெரிவித்தார்.

அமைச்சர் ஜகத் புஸ்பகுமார மேலும் கூறுகையில்,

ஜேர்மனியை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமானது 4 இருக்கைகள் கொண்ட உலங்குவானூர்தியின் உதிரிப்பாகங்களை ஆழிப்பேரலை பொருட்களினூடே ஜேர்மனியிலிருந்து தென்னாபிரிக்கா வழியாக கொண்டுவந்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய ஜோகன்ஸ்பெர்க்கில் உள்ள அந்த நிறுவனத்துக்கே இந்த பாகங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதேபோல் லொஸ்ஏஞ்சல்சிலிருந்து 4இருக்கை கொண்ட உலங்கு வானூர்தியின் உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அமெரிக்காவிலிருந்து துபாய் வழியாக கொலின் பிரான்க் டிவிஸ் என்ற பெயரில் இங்கே கொண்டு வரப்பட்டது. அதுவும் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது.

ஸ்பெயினில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு கொண்டுவரப்பட்ட மேலதிக வாகனங்களில் மோட்டோராலா தகவல் தொடர்பு உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த வாகனங்கள் விமானப்படையின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு ஒரு மாதம் கழித்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டது. ஜெனீவா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இரு செய்மதி தொலைபேசி உள்ளிட்ட 5 தகவல் தொடர்பு உபகர ணங்கள் கொண்டுவரப்பட்டன.

லண்டனில் உள்ள சிவயோகம் என்பவரிடமிருந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு இரும்புத் தளபாடங்கள் கொண்டு வரப்பட்டன உரிய விசாரணைகளுக்குப்பின்னர் அவை ஒப்படைக்கப்பட்டன என்றார். (கு)

## இரண்டு தலையுடன் பிறந்த குழந்தை!

(சிலாபம்)

சிலாபம் வைத்தியசாலையில் இரண்டு தலைகளை கொண்ட குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

இந்தக்குழந்தை கடந்த செவ்வாய்க்கிழமை பிறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு தலைகளைக்கொண்ட இந்தக் குழந்தைக்கு 3கைகள் மாத்திரம் உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (கு-9)

## கன்னாதிட்டி சந்தியில்—— துப்பாக்கி காட்டி கொள்ளை

கன்னாதிட்டி சந்தியில் நகைக்கடையை திறந்து கொண்டிருந்த நகைக் கடை உரிமையாளரின் கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கியை காட்டி பறித்துச் சென்றதாகத் தெரிகிறது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை 7.30மணியளவில் இடம்பெற்றது. பறிக்கப்பட்ட கைப்பையினுள் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான தங்கநகைகள் மற்றும் பணம் , இரும்பு பெட்டக சாவிகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிளை இயங்கிய நிலையில் வைத்திருக்க , மற்றையவர் இறங்கி கைப்பையை பறித்தவேளை மோட்டார் சைக்கிளில் இருந்தவர் அதனை முட்டாஸ் கடைச் சந்திவரை தனியே செலுத்திச் சென்றதாகவும் பறித்தெடுத்தவர் கைப்பையை கன்னாதிட்டி சிவன்கோவிலடியில் இருந்து முட்டாஸ்கடைச் சந்தி வரை வேகமாக ஓடிச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-132,133)

## மீனவரின் வீடமைப்புத் தொகையை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

மீனவர்களுக்கான வீடமைப்புத் தொகையை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சின் பாராளுமன்ற உபகுழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக மீனவ வீடமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான பிரதியமைச்சர் சந்திரசிறி கஜவீர தெரிவித்துள்ளார்.

முன்னர் இதற்கென வழங்கப்பட்ட தொகை 50 ஆயிரம் ரூபாவாகும் .வீடமைப்பு நிதியுதவி வழங்கப்பட வேண்டிய குடும்பங்கள் கிராம சேவையாளர்கள் மூலமும் பிரதேச மீன்பிடி அலுவலக அதிகாரிகள் ஊடாகவும் தெரிவு செய்யப்படும்.

தெரிவு செய்யப்படும் மீனவ குடும்பங்களுக்கு குறிப்பிடப்பட்ட நிதியுதவித்தொகை பல கூட்டங்களின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

நிதியுதவி வழங்கப்பட்ட பின்னர் கட்டடநிர்மாணப் பணி கள் குறித்து வீடமைப்பு அமைச்சின் தொழில்நுட்ப அதி காரி கள் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கை கள் மேற்கொள்ளப் பட வுள்ளதாகவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வை நிறுத்தி வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு பிரச்சினை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவீனங்கள் அதிகரித்துள்ள நிலையில் சம்பள உயர்வு குறித்து மஹிந்த ராஜபக்ஷ பரிசீலித் தார். ஆ னால் அத்தகைய முடிவு தற்போதைய நிலையில் செயற்படுத்துவது பொருத்தமானதாக இருக்காது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்தப்பிரச்சினை அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சம்பள உயர்வை செயற்படுத்த வேண்டாம் என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவும் சம்பள உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (கு)

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான செயற்றிட்டம் அறிமுகம்

(கொழும்பு)

யுனிசெப் நிறுவனம், இலங்கை சுற்றுலாச் சபையுடன் இணைந்து சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான செயற்றிட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

இலங்கையில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாலியல் தொழிலாளர்களாக உள்ளனர். வெளிநாட்டு சுற்றுலா பயணிகளாலேயே பெருமளவு சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் முகமாக யுனிசெப் நிறுவனம், இலங்கை சுற்றுலா சபையுடன் இணைந்து இரண்டு வருடத்திற்கான செயற்றிட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டமாக சிறுவர்கள், இளம்பராயத்தினர் , அவர்களுடைய குடும்பத்தினர், சமூகத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோ ரிற்கு சுற் றுலாத்துறையின் மூலம் சிறுவர்கள் துஷ் பிரயோகத் திற்குள்ளாதல் , சிறுவர் பாலியல் தொழிலாளிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளோம்.

பாலியல் சுரண்டலிற்குள்ளாகும் 5முதல் 20வரையான வயதிற் குட்பட்ட சிறுபராயத்தினருக்கு ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகவும், தொலைக்காட்சி , வானொலி மற்றும் பத்திரிகைகளினூடாக விழிப்புணர்வூட் டப்படும்.

சுற்றுலாத்துறையினால் பாலியல் சுரண்டல் நடைபெறுதல் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத விடயமாக இருந்தாலும், இது வளர்ச்சியடைந்தே வருகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் பாலியல் தொழி லில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கையை ஒரு எச்சரிக்கையாகக் கருதி செயற்பட வேண்டியுள்ளது.

உலகளாவிய ரீதியில் 2 மில்லியன் சிறுவர்கள் பாலியல் சுரண்டல்களுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

பொருளாதார பின்னடைவான நாடுகளில் வறுமை காரணமாகவே பெருமளவான சிறுவர்கள் பாலியல் துஷ் பிரயோகத்திற்கு இலக்காகின்றார்கள். தமது குடும்பத்தை பரா மரிப்பதற்காகவும் உணவு, உடை மற்றும் இனிப்புப் பண்டங்களுக்காகவும் சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என்றுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் குழந்தைகள் வாழ்க்கை முழுவதும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கிறார்கள். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தெற் காசியாவின் முதலாவது நாடு இலங்கை என்பது குறிப்பிடத் தக்கதாகும். (கு-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டு மனதை நிலைநிறுத்துவது தானே தியானம். அப்படி மனதை ஆழ்ந்து செலுத்தும் போது அந்த விஷயத்தில் மறைந்திருக்கும் இரகசியமான உட்கருத்துக்கள் புலனாகின்றன.

சுவாமி விவேகானந்தர்

# வலம்புரிச் செய்திக்கு ஈ.பி.டி.பி. விளக்கமளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலம்புரியின் முன் பக்கத்தில் நேற்று வெளியான 'யாழ்.நகரப் பகுதியில் நேற்று இராணுவம் குவிப்பு' என்ற செய்தி தொடர்பாக ஈ.பி.டி.பி.செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து நிலைமைகளை பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் ஜுன் 6 ஆம் திகதியிலிருந்து தங்கியிருந்து அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துள்ளனர்.

மேற்படி ஊடகவியலாளர்களுடன்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீவகப் பகுதிகளுக்கு விஜயம் செய்ததோடு மீளக் குடியேறிய அல்லப்பிட்டி மக்களின் குடியிருப்புக்களுக்கும் நேரில் சென்று அந்த மக்களின் நிலைமைகளை ஊடகவியலாளர்களுக்கு விளக்கியுமுள்ளார்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பிலிருந்து வருவதற்காக இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக நேற்றைய தினம் வலம்புரியில் பிரசுரமாகியிருந்த செய்தி தவறானது என ஈ.பி.டி.பியின் ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)



மன்னாரிலிருந்து தமிழகம் சென்ற ஈழத் தமிழ் அகதிகளை இராமேஸ்வரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# மதிய உணவு உட்கொண்ட 60 மாணவர்கள் மயக்கம்

(கொழும்பு)

மதிய உணவில் ஏற்பட்ட நஞ்சுத் தன்மை காரணமாக கிண்ணியா முனைச்சேனை மகளிர் அரபிக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 60 மாணவிகள் கிண்ணியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நண்பகல் கல்லூரியில் சமைத்த உணவில் ஏற்பட்ட நச்சுத்தன்மை காரணமாகவே இம்மாணவிகள் திடீரென சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவிகளில் சுமார் 15 மாணவிகள் சிகிச்சையின்பின் வெளியேறினர். இது குறித்து விசாரணையை மேற்கொள்ளும் பொருட்டு இக் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ச-9)

# ஈழவேந்தன் எம்.பியின் உயிருக்கு இராணுவத்தினரால் அச்சுறுத்தல்

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரின் நடவடிக்கையால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் க.ஈழவேந்தன் பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பிரதேசத்தில் தனது மனைவியுடன் வாகனத்தில் பயணம் செய்தபோது பாதுகாப்புப் படையினர் தனது வாகனத்தை நிறுத்தி மரண அச்சுறுத்தல் விடுத்து சோதனை செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில் தனது வழமையான நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தனது பாதுகாப்பை உறுத்திப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

பாராளுமன்ற அமர்வின் நடவடிக்கைகள் ஆரம்பமானதன் போது சிறப்புரிமைக் கேள்வி ஒன்றை எழுப்பி அவர் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஈழவேந்தன் படைப்பிரிவினர் மீது போலியான குற்றச்சாட்டைச் சுமத்துகின்றார் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஈழவேந்தன் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்துள்ளார். (ச-9)

# இராணுவத்தினர்மீது கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியில் வீதிக் கடமையில் நின்றிருந்த இராணுவத்தினர்மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலையடுத்து பதிலுக்கு இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொண்டனர். இத் தாக்குதல் சம்பவத்தின் சேத விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை எனஅறியவருகின்றது. (5)

# இனப்பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன விடுதலைப்புலிகளிடம் அரசு கேள்வி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு எந்தவகையிலான தீர்வு காண்பது என்பது குறித்து அரசாங்கத்திடம் தமிழீழ விடுதலைப்புலிகள் எந்த ஒரு தீர்வையும் தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

ஹெப்பிட்டிக்கொல்லாவ சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பதிலளித்து அவர் பேசியதாவது;

ஹெப்பிட்டிக்கொல்லாவ சம்பவம் ஆனது விடுதலைப்புலிகளால்தான் நடத்தப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சி-04 வெடிகுண்டானது விடுதலைப்புலிகளால் முன்னைய தாக்குதலில் பயன்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சியினர் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்று கேள்வியெழுப்பினர். பேச்சுகளுக்குப்பின்னர் அந்த கேள்விகளுக்கான விடை கிடைக்கும்.

ஆனால் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிற்கும் எந்தவொரு தீர்வையும் அரசாங்கம் ஒத்துக்கொள்ளாது.

இந்திய அரசியல் யாப்பு என்பது ஒற்றையாட்சியும் கூட்டாட்சியும் இணைந்தது. உலகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு அதிகாரப் பகிர்வு முறையில்லை.

பேச்சு மேசையில்தான் அது தீர்மானிக்கப்படும். அரச படைகள் மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள போதும் விடுதலைப்புலிகள் அமைதிப் பேச்சுகளுக்கு திரும்புவார்கள் என்று நம்புகின்றோம் என்றார். (ச)

# ஜோசப் எம்.பியின் இடத்திற்கு சந்திரநேருவின் மகன் நியமனம்?

(கொழும்பு)

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேருவின் மகன் சந்திரகாந்தன் நியமிக்கப்படக்கூடும் என்று தெரிகின்றது.

இது தொடர்பாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்திரநேருவின் மகனை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்ய ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

லண்டனிலுள்ள சந்திரகாந்தனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேரில் சந்தித்து இலங்கைக்கு அழைத்துவரவுள்ளதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## புதிய கண்காணிப்பாளர்களை...

இது பற்றித்தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் கோரிக்கை நோர்வேயைச் சங்கடத்தில் தள்ளியுள்ளது.

கண்காணிப்பாளர்களைத் தந்துள்ள ஐந்து ஸ்கன்டினேவிய நாடுகளின் பிரதிநிதிகள் ஜுன் 29 ஆம் திகதி ஒஸ்லோவில் சந்தித்து கண்காணிப்புக் குழுவின் எதிர்காலம் பற்றி பேச இருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உதவிபுரியும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து எவரையும் நீக்குமாறு அரசு யாரையும் கேட்கவில்லை.

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்துள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகவே இங்கு வந்துள்ளனர்.

அவர்களது நாட்டின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளாக இதில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. சுய விருப்பத்தின் பேரில் பொது நலன் கருதியே இங்கு பணியாற்றுகின்றனர் என்று அமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார். (ச-5,6)

## மட்டக்களப்பில்...

இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தினர்.

அதில் அங்கிருந்தவர்களுடன் நின்ற கண்ணன் (வயது 23) என்பவரை சுட்டுக் கொலை செய்தனர். சம்பவம் இடம்பெற்ற போது துணை இராணுவக்குழுவினரும் அப் பகுதியில் நின்றதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ச-5)

## மங்கள...

பிரதமருக்கும் சமரவீரவுக்குமிடையிலான பேச்சுக்களில் கலந்து கொள்ளும் எம்.கே. நாராயணன் பின்னர் சென்னை வந்து முதலமைச்சர் கருணாநிதிக்கு பேச்சுக்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறவுள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் விமானத் தாக்குல்கள் நடத்தப்படுவதை முடிபுக்கு கொண்டுவரவேண்டுமென்று பிராந்திய ரீதியில் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் அமைப்புக்கள் கோரிவருகின்றன. (ச-5,6)

## கேள்வி அறிவித்தல்

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

**விண்ணப்பத் திகதி நீடிப்பு**

வலம்புரிப் பத்திரிகையில் 02.06.2006 அன்று வெளியான அரச அதிபரின் வாசஸ்தலம் இரு மாடிக் கட்டடம் அமைத்தல் மற்றும் மாநாட்டு மண்டபம் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான கேள்வி அறிவித்தலின் விண்ணப்ப முடிபுத் திகதி 07.07.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது முன்னர் 22.06.2006 என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
23.06.2006.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர்,
தலைவர்.




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.